விலை: 30.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 018 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 22 வியாழக்கிழமை (06.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## நட்டஈட்டை பெறமுடியாத அவலத்தில் வடபகுதி விவசாயிகள்

### விவசாய காப்புறுதி சபை மீது குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)
கடும் மழை காரணமாக ஏற்பட்ட நெற்பயிர் அழிவுக்குரிய நட்டஈட்டைப் பெறமுடியாமல் வடபுலத்து விவசாயிகள் திண்டாடுகின்றனர்.
கடும் மழை காரணமாக வடபகுதியில் நெற்பயிர்கள் முற்று முழுதாகவும் பகுதியளவிலும் அழிவடைந்துள்ளன.
இந்தநிலையில், குறித்த நெற்பயிர் அழிவுக்குரிய இழப்பீட்டை பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களை வரை யறுக்கப்பட்ட அளவில் 15

பொதுத் தேர்தலுக்கு முன்

## அரசைக் கவிழ்க்க மக்கள் வீதிக்கு இறங்க வேண்டும்

### ஜே.வி.பி தலைவர் அநுரகுமார

(கொழும்பு)
பொதுத் தேர்தலுக்கு முன்னர் அரசைக் கவிழ்க்க வேண்டுமாயின் மக்கள் வீதியில் இறங்க வேண்டும் என ஜே.வி.பியின் தலை 15

## அரிசி விலை சடுதியாக உயர்வு

### தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு



(கொழும்பு)
சந்தையில் அரிசியின் விலை மீண்டும் சடுதியாக அதிகரித்துள்ளதாக அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
இதனால் சந்தையில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளது.
அதற்கமைய, நாட்டரிசி ஒரு கிலோகிராம் 170 ரூபாய் வரையிலும் சம்பா அரிசி ஒரு கிலோகிராம் 190 ரூபாய் வரையிலும் அதிகரித்துள்ளதாக அந்த சங்கம் தெரிவித் 15

## யாழ்.ஆரியகுளத்தின் உரிமையை உறுதிப்படுத்துக

### யாழ்.மாநகர ஆணையாளருக்கு வடக்கு ஆளுநர் கடிதம்

- மத அனுட்டானங்களைத் தடுக்கும் அதிகாரம் யாழ்.மாநகர சபைக்கு இல்லை.
- தேவையெனின் மேலதிக விளக்கத்துக்கு மாநகர உறுப்பினர்களை சந்திக்கத் தயார்.

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம், ஆரியகுளத்தில் பொதுமக்களின் சமய உரிமையை மீறும் வகையில் செயற்படும் அதிகாரம் மாநகர சபைக்குக்கிடையாது என்று பொருள்பட யாழ்ப்பாண மாநகர ஆணையாளருக்கு வடக்கு மாகாண ஆளுநர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.
யாழ். மாநகர முதல்வரின் ஏற்பாட்டில் தனி 15

## கொரோனா 10 பேர் பலி

(கொழும்பு)
கோவிட் தொற்றால் நாட்டில் மேலும் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.
இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் 15

## வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டோம்

### நாட்டின் நிலைமை தொடர்பில் எதிரணியினர் எச்சரிக்கை



(கொழும்பு)
நாம் இப்போது வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டோம் என எதிரணிப் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் எச்சரித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

புதுக்குடியிருப்பில்

## வெடிகுண்டுகளுடன் 6 பேர் கைது

(புதுக்குடியிருப்பு)
புதுக்குடியிருப்பில் போரின் போது கைவிடப்பட்ட இரண்டு வெடிகுண்டுகளை இரும்பிற்கு விற்பனை செய்யக் கொண்டு சென்ற 6 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 15

இலங்கையில் அச்சுறுத்தும் டெங்கு

## கடந்த 5 நாட்களில் 1,221 பேர் பாதிப்பு

(கொழும்பு)
இலங்கையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் கடந்த 5 நாட்களில் மட்டும் ஆயிரத்து 221 நோயா 15

வல்வெட்டித்துறை

## பட்டத் திருவிழா இடைநிறுத்தம்

(கரணவாய்)
வல்வெட்டித்துறை பட்டத் திருவிழா கொரோனா இடர் காரணமாக இடைநிறுத்தப்படுவதாக, ஏற்பாட்டுக்குழு 15

## 12 - 15 வயதுடையோருக்கு 7ஆம் திகதி முதல் தடுப்பூசி

### சுகாதார அமைச்சர் கெஹலிய



(கொழும்பு)
நாட்டில் 12 தொடக்கம் 15 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமன்னாரில் கைதான 12 இந்திய மீனவர்களும் விடுவிப்பு

இலங்கை கடலில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் தலைமன்னாரில் கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களும் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மீனவர்களுக்கு எதிராக இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்தமை, இலங்கைக் கடல் எல்லைக்குள் தமது படகின் வலைகள் உள்ளிட்ட பொருட்களின் தொடர்பினை அறுக்காமை, இலங்கை கடற்பரப்பினுள் தடை செய்யப்பட்ட இழுவைமடியை பயன்படுத்தியமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுகள் கடற்றொழில் திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்டன.

இந்த குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப்பத்திரம் நேற்று கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளால் மன்றில் வாசிக்கப்பட்டபோது அதனை இந்திய மீனவர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து, இந்திய மீனவர்களுக்கு 10 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத்தண்டனை விதித்து மன்னார் நீதவான் பெருமாள் சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் சிறுவர் என்பதால், அவரை 2 வருட சிறுவர் நன்னடத்தைப் பிரிவில் வைத்து பராமரிக்குமாறும் நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்திய மீனவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்படுவதாகவும் நீதவான் அறிவித்துள்ளார். (ம-285)

# கூட்டணி தேவைப்படும் சந்தர்ப்பத்தில் இருப்பவர்களை ஒதுக்கக்கூடாது

## அமைச்சர் விமல் வீரவன்ச

(கொழும்பு)

பரந்த கூட்டணியொன்று தேவைப்படுகின்ற சந்தர்ப்பத்தில், இருப்பவர்களை ஒதுக்கக்கூடாது என அமைச்சர் விமல் வீரவன்ச நேற்று மாலபேயில் தெரிவித்தார்.

மாலபே ஆண்கள் கல்லூரியின் தொழில்நுட்பக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் அமைச்சர் விமல் வீரவன்ச நேற்று கலந்துகொண்டார்.

நிகழ்வு நிறைவு பெற்றதன் பின்னர் சுசில் பிரேமஜயந்த இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் வினவினர்.

இதன்போது ஊடகவியலாளர்களுக்கு பதிலளித்த விமல் வீரவன்ச, முடிந்தால் எதிர்க்கட்சியில் உள்ளவர்களையும் இணைத்துக்கொண்டு தேசிய இணக்கப்பாட்டுடன் நாடு எதிர்நோக்கியுள்ள நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு பரந்த கூட்டணியொன்றை ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய தருணமே இதுவென குறிப்பிட்டார்.

அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில், இருப்பவர்களையும் அகற்றிவிடக்கூடாது என சுட்டிக்காட்டினார். (ம)

# நெல்லியடி பேருந்து நிலையத்தில் இ.போ.சபையினர்-ஆட்டோ ஓட்டுநர்களுக்கிடையே மோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நெல்லியடி பேருந்து நிலையத்தில் இ.போ.சபையினருக்கும் வாடகை ஆட்டோ ஓட்டுநர்களுக்குமிடையில் ஏற்பட்ட தகராறில் பேருந்து ஒன்றின் மீதும், சாரதி, நடத்துனர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

தாக்குதலுக்குள்ளானதாகக் கூறப்படும் சாரதி மற்றும் நடத்துனர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

நேற்று முன்தினம் மாலை இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. (ம)


## இந்து பௌத்த கலாசார பேரவையின் இரண்டாம் மொழிக் கற்கைநெறி சம்பந்தமாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இளைஞர், யுவதிகளுக்கான விசேட அறிவித்தல்

இந்து பௌத்த கலாசார பேரவையினால் நடாத்தப்படும் இரண்டாம் மொழியான சிங்களம் மற்றும் ஆங்கில வகுப்புக்கள் ஜனவரி 15ஆம், 16ஆம் திகதிகளில் அதாவது சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆரம்பிக்கப்படவுள்ளனு.

- வகுப்பு நடைபெறும் இடம் : **கிளிநொச்சி மக்கள் வங்கிக்கு அருகாமையிலுள்ள கட்டடத்தில்**
  சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை பதிவுகளை மேற்கொள்ளலாம்.
- 120 மணித்தியாலங்கள் முற்றிலும் இலவசமாக கற்பிக்கப்படும்.
- வயது எல்லை : **15 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களும்** வயது வந்தவர்களும் கலந்துகொள்ளலாம்.

இந்து பௌத்த கலாசார பேரவையில் அங்கத்தவராக இணைந்து கொண்டு கற்கைநெறியினை முற்றிலும் இலவசமாக கற்றுக்கொள்ளலாம். 6 மாதங்களுக்கு பின்பு அவர்களுக்கான பரீட்சை நடைபெற்று அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும். இதில் கலந்துகொள்ளும் மாணவர்கள் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் கல்வி கற்கலாம். கற்பித்தலுக்கான கட்டணம் எதுவும் உங்களிடம் இருந்து அறவிடப்படமாட்டாது.

(9425)

தொடர்புகளுக்கு
**077 271 1181**



## வேலை வாய்ப்பு

இலங்கையின் பிரதான நிதி நிறுவனத்தின் நெல்லியடிக் கிளையில் உடனடி வேலை வாய்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் மற்றும் தமிழ் மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

(வடமராட்சி பகுதியைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு (C-3439)
**076 652 0662, 077 263 1426**


## மரண அறிவித்தல்



### கந்தையா ஏகாம்பரம்

எழுவைதீவைப் பிறப்பிடமாகவும் நயினாதீவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஏகாம்பரம் அவர்கள் நேற்று (05.01.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற எழுவைதீவைச் சேர்ந்த கந்தையா - பறுவதம் தம்பதியரின் ஏக புதல்வனும் காலஞ்சென்றவர்களான நயினாதீவைச் சேர்ந்த நாகனாதி - காமாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்புக் கணவரும் கேதீஸ்வரன், காலஞ்சென்றவர்களான மதிவதனி, மதிவேணி மற்றும் மதுரவாணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சகுந்தலா, செல்வதீசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜனுசனின் அன்பு அப்பப்பாவும் தங்கமுத்து, நாகம்மா, கந்தசாமி, நாகலெட்சுமி, செல்லம்மா, இந்திராணி, மங்கையற்கரசி, செல்வநாயகி, ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்பு. மைத்துனரும் காலஞ்சென்றவர்களான தருமலிங்கம், கந்தையா, சிவராசா, இரத்தினேஸ்வரி மற்றும் நடராசா, யோன்பிள்ளை, றஞ்சன், சிவானந்தராசா, இந்திராணி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.01.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

8 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(C-3441)

தகவல் :-
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### இளையதம்பி திருமேனி

(ஓய்வுநிலை செயலாளர் – வவுனியா தெற்கு பிரதேச சபை)

புலோலியைப் பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி திருமேனி அவர்கள் நேற்று (05.01.2022) புதன்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் வைரமுத்து, சின்னத்துரை, செல்லம்மா, தருமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.01.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (மீசாலை) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

(C-3440)

தகவல் :-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபையின் கீழுள்ள மருத்துவமனைகளை மத்தியின் கீழ் கொண்டு வர அரசு தீவிர முயற்சி

(கொழும்பு)

**மாகாண சபைகளின் கீழ் உள்ள மருத்துவமனைகளை மத்திய சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வருவது தொடர்பில் கவனம் செலுத்தி வருவதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

நாளாந்தம் மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை, மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுகாதார பணியாளர்களை கருத்திற்கொண்டு மக்களின் சுகாதார சேவைகளை மேம்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார்.

எனினும் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் உருவான 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைக்குச் சொந்தமாக உள்ள மருத்துவமனைகள் உள்ளிட்ட நிறுவனங்களை சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வரும் விடயத்தில் உள்ள சிக்கல்கள் குறித்து கவனத்தில் கொள்ள வேண்டுமெனவும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது உள்ள சுகாதார அமைப்பை வலுப்படுத்த வேண்டும். நாட்டின் எதிர்காலத்திற்கு இது சாதகமாக அமையும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, அபிவிருத்தி என்ற போர்வையில் ஏற்கனவே வடக்கு, கிழக்கில் மாகாண சபைகளின் கீழ் உள்ள மருத்துவமனைகளை கையேற்க மத்திய அரசு மேற்கொண்ட முயற்சிகளுக்குக் கடும் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டன.

இது 13 ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட சில அற்ப-சொற்ப அதிகாரங்களையும் தட்டிப் பறிக்கும் முயற்சி என வடக்கு, கிழக்கில் இருந்து கண்டன குரல்கள் எழுந்தன.

உண்மையில் மருத்துவமனைகளை அபிவிருத்தி செய்யும் எண்ணம் மத்திய அரசுக்கு இருக்குமானால் மாகாண அரசின் கீழ் அவை உள்ள நிலையிலேயே அதனைச் செய்ய வேண்டும். மாறாக மத்திய அரசின் கீழ் அவற்றை பொறுப்பேற்க முற்படுகின்றமை மத்தியின் மாகாணங்களுக்கான அதிகாரங்களை பறிக்கும் முயற்சியின் ஒரு அங்கமே என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இதேபோன்றே மாகாண சபைகளின் கீழ் உள்ள பாடசாலைகளையும் தேசியப் பாடசாலைகள் என்ற போர்வையில் மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

## நூற்றிற்கு மேற்பட்ட பயணிகளுடன் நடுக்கடலில் பழுதடைந்தது 'சமுத்திரா தேவி' படகு



(யாழ்ப்பாணம்)


நெடுந்தீவு- குறிகாட்டுவான் இடையிலான கடற் போக்குவரத்துச் சேவையின் போது சமுத்திரதேவிப் படகு இடைநடுவில் பழுதடைந்தமையால் இடம்பெறவிருந்த பாரிய அசம்பாவிதம் மயிரிழையில் தவிர்க்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, நேற்றுக் காலை நூற்றிற்கும் மேற்பட்ட பயணிகளுடன் நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவான் நோக்கிப் புறப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சமுத்திரதேவிப் படகு இடைநடுவில் பழுதடைந்த நிலையில் வடதாரகைப் படகின் உதவியுடன் குறிகாட்டுவான் நோக்கி இழுத்து வரப்பட்டது.

சுக்கான் தடி உடைந்தமையினால் இடைநடுவில் பயணிகளை வடதாரகைப் படகிற்கு மாற்ற முடியாத நிலையிலும், பல இடையூறுகளுக்கு மத்தியிலும் வடதாரகைப் படகினால் இழுத்து வரப்பட்டது.

இதன் காரணமாக நேற்றுக் காலை 7 மணியளவில் நெடுந்தீவிலிருந்து புறப்பட்ட பொதுமக்கள் மிகவும் கால தாமதமாகி முற்பகல் ஒரு மணியினை அண்மித்தே குறிகாட்டுவான் இறங்கு துறைமுகம்வந்து சேர்ந்தனர். (4-5-18-33-104)

## வல்லை புறாப்பொறுக்கி பகுதியில் பேருந்து மீது கல்வீச்சு



(கரணவாய்)

பருத்தித்துறையில் இருந்து திருகோணமலைக்கு புறப்பட்டு சென்ற இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து மீது வல்லை புறாப்பொறுக்கி பகுதியில் வைத்து கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. நேற்று புதன்கிழமை அதிகாலை 4 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இதில் பேருந்தின் முன்பக்க கண்ணாடிகள் சேதம் அடைந்தன. இது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. இச்சம்பவத்தை அடுத்து பருத்தித்துறை சாலையில் இருந்து பேருந்துகள் சேவையில் ஈடுபடாத நிலையில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகினர். இதனைத் தொடர்ந்து நெல்லியடி மற்றும் காங்கேசன்துறையில் இருந்து வருகை தந்த பொலிஸார் பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்பட்டதை தொடர்ந்து காலை 7 மணி அளவில் இருந்து பேருந்துகள் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. (4-5-33-60)

## மலேரியாவை பரப்பும் நுளம்பு இனம் யாழ்.நகர்ப்பகுதியில் அடையாளம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரப் ப்குதியில் அனோபிலிஸ் டிபென்சி எனும் மலேரியா அல்லது நகரப்புற மலேரியாவை பரப்பக்கூடிய ஒருவகை நுளம்பு யாழ்ப்பாண நகரப் பகுதியில் அடையாளம் காணப்பூட்டுள்ளது.

இந்நிலைமை மிகவும் ஒரு அபாயகரமானது என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் எச்சரித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.நகரில் அடையாளம் காணப்பட்டுள்ள இந்த நுளம்பு மூலம் எமது பகுதியில் மலே ரியா அதிகம் பரவக்கூடிய சாத்தியக்கூறு காணப்படுகிறது. மலேரியாவை பரப்பக்கூடிய நுளம்புகள் எங்களுடைய பிரதேசங்களில் தாராளமாக உள் ளன.

எனவே வெளிநாட்டில் இரு ந்து ஒருவர் இந்த மலேரியா தோற்றத்துடன் இங்கே வந் தால் உள்ளூரிலே இந்த நோய் பரவக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இந்த சூழ் நிலையில் எவ்வாறு இந் நோயினை கட்டுப்படுத்தலாம் என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்.

குறிப்பாக மலேரியா உள்ள நாடுகளுக்கு செல்வோர் இந்த விடயம் தொடர்பில் அவதானமாக செயற்பட வேண்டும் என தெரிவித்தனர். (4-5-18-104)


பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- கணனி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு (இருபாலாரும்)
  - தகைமை : க.பொ.த உயர்தரம்
  - வயது : 25 இற்கு மேல்
- அலுவலகச் செய்தியாளர்கள் (இருபாலாரும்)
  - தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி
  - வயது : 25 இற்கு மேல்
- ஒப்புநோக்குநர் (இருபாலாரும்)
  - தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி
  - வயது : 30 இற்கு மேல்
- பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்)
  - தகைமை : க.பொ.த.சாதாரண தரம்
  - வயது : 40 இற்கு மேல்

மேலதிக தொடர்புகளுக்கு
076 097 3121


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
20 - 03 - 1944

மறைவு
05 - 01 - 2022

அமரர்

## கணபதிப்பிள்ளை செல்லத்துரை

[ உரிமையாளர் : சோதி புடைவையகம் - யாழ்ப்பாணம்,
விஸ்ணு ஹாட்வெயார் - புத்தூர், விஸ்ணு ஹாட்வெயார் - புன்னாலைக்கட்டுவன் ]

காற்றிலே வந்த செய்தி கானலாகிப் போகாதா என
கலங்கி துடித்தபடி கதறுகின்றோம்
வாழ்விற்கு இலக்கணம் வகுத்து வாழ்வாங்கு
வாழ்ந்தவரே வானுறையும் நீங்கள்
தெய்வத்தில் வைக்கப்பட
இறைவனை வேண்டுகிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
யாழ். வணிகர் கழக நண்பர்கள்

(9426)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸ்ஸை இயங்க வைக்க முயன்றவர் அந்த பஸ்ஸுக்கே பலியான சோகம்

(கொழும்பு)

தெஹியோவிட்ட பழைய பேருந்து தரிப்பிடத்தில் பேருந்தில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் இம்புல்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதான இளைஞரொருவரே உயிரிழந்துள்ளார்.

பேருந்து திருத்தப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது திடீரென முன்னோக்கி வந்த பேருந்தில் சிக்கி இந்த விபத்து நேர்ந்துள்ளது. உயிரிழந்த இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக அவிசாவளை மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை தெஹியோவிட்ட பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5)

## ஆசியாவின் ராணியை 2000 கோடிக்கு வாங்க டுபாய் இணக்கம்- இலங்கை மறுப்பு

(கொழும்பு)

இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட ஆசியா வின் ராணி என பெயர் சூட்டப்பட்ட இரத்தி னக்கல்லை டுபாய் நிறுவனமொன்று வாங்கு வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அதற்காக 100 மில்லியன் டொலர் என மதிப்பிடப்பட்டது. அது இலங்கை பெறுமதி 2000 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியாகும். டுபாய் நாட்டைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றே இந்த விலையை அறிவித்திருந்தது.

அந்த விலையில் இரத்தினக்கற்களை வழங்க இலங்கை தயாராக இல்லை என இரத்தினக்கல் மற்றும் ஆபரண இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார். அதனை விடவும் அதிக விலை எதிர்பார்ப்பில் ஏலத்தில் விடுவதற்கு தீர்மானித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

310 கிலோ கிராம் நிறையுடைய ஆசியாவின் ராணி என அழைக்கப்படும் இந்த நீல இரத்தினக்கல் இரத்தினபுரி, பலாங்கொடை பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## அந்தியேட்டிக் கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் -08.05.1967
மறைவு - 09.12.2021

கடந்த 09.12.2021 அன்று சிவபதம் அடைந்த குடும்ப தலைவர்

### அமரர். இராசையா யோகராசா

(Sales Supervisor LIC jaffna Branch, Membership- Lions club of Vadamaradchy)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 07.01.2022 நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து அன்று மதியம் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு உடன் ஓடோடி வந்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலி, பதாகைகள், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தொலைபேசி மூலமாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் பல வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

(இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.)

முருகன் கோவில் ஒழுங்கை,
புலோலி வடமேற்கு, புலோலி.

(C-3424)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்வி. சுதர்சனா (சஜி) – கதிரமலை

Project Consultant

(Former staff of world vision and Greenteck Pvt ltd)



அம்பனை, தெல்லிப் பழையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சுதர்சனா கதிரமலை அவர்கள் 01.01.2022 அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரமலை- அன்னப்பிள்ளை தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியும், Dr. இராஜசேகரன் (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), சுமதி (லண்டன்), சுகந்தி (லண்டன்), சுகுணா (கனடா) ஆகியோரின் அன்பு சகோதரியும், Dr. திருமகள் (பிரதேச வைத்தியசாலை, கோப்பாய்), திலகேந்திரன் (லண்டன்), சற்குணம் (லண்டன்), உதயகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், தாட்சாயினி (மருத்துவபீட 3ம் வருட மாணவி), பிரகலாதன், கேதாரணி ஆகியோரின் அன்பு மாமியாரும், பாகுலன் (லண்டன்), பாரிதன் (லண்டன்), கஸ்தூரி (லண்டன்) ஆகியோரின் அன்பு சிறிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (07.01.2022) நாளை வெள்ளிக் கிழமையன்று காலை 10 மணிக்கு அன்னாரின் சகோதரர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(9413)

06, இராணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்: Dr. இராஜசேகரன் (சகோதரர்)
தொடர்பு- 077 716 7929, 077 794 9770

## இராசிபலன்

06.01.2022
மார்கழி 22, வியாழக்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 5.55 மணிவரை
அவிட்டம் பிற்பகல் 12.14 மணிவரை
சுபநேரம் -8.01-9.31 மணிவரை
இராகுகாலம் -2.01-3.31 மணிவரை
சந்திராஷ்டமம்: புனர்பூசம், பூசம்
சதுர்த்தி விரதம்

வளவன்

**மேஷம்**: ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், ஆனந்தமான நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்**: தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**மிதுனம்**: விட்டுப் போன தொடர்புகள் மீண்டும் வந்து சேரலாம், தொழில் சம்பந்தமான புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு.

**கடகம்**: நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலையுண்டு, பிரயாண பயமுண்டு.

**சிம்மம்**: குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி அதிகரிக்கும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி**: மறைமுகப் போட்டிகள் மாறும், இனத்தார் பகை மாறி இன்பங்கள் கூடும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன நன்மையுண்டு.

**துலாம்**: கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிள்ளைகளால் பெருமையுண்டு.

**விருச்சிகம்**: சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.

**தனுசு**: உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், வியாபார விரோதம் விலகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**மகரம்**: குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொது வாழ்வில் புகழ் கூடும், வருமானம் திருப்தி தரும்.

**கும்பம்**: சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், தொழிலில் அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள்.

**மீனம்**: எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள்.

நீ நினைத்தால் எல்லாருக்கும் எல்லாமுமாய் வாழலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களை பிச்சைப் பாத்திரம் ஏந்த வைத்து விட்டது இந்த அரசு



## சுரேஷ் பிறேமச்சந்திரன் காட்டம்

(யாழ்ப்பாணம்)

சிங்கள-பௌத்த மேலாதிக்க வாதத்தின் மூலம் ஆட்சியை கைப்பற்றி தக்க வைத்துக்கொள்ளவதற்காக இலங்கையின் ஆட்சியாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாகவே இன்று மக்களின் ஆணையை மீறி சர்வதேசத்திடம் அடகு வைப்பதற்கும் பிச்சையெடுப்பதற்கும் இலங்கையைத் தள்ளியுள்ளது என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

நாட்டின் இன்றைய பொருளாதார நிலை குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆளுந்தரப்பு அமைச்சர்களே மக்களை எச்சரிக்கும் வகையிலும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சி குறித்து பேச ஆரம்பித்திருக்கிறார்கள். எதிரணியிலிருக்கக் கூடியவர்கள் அனைவரும் பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு புதிய தேர்தலுக்குப் போகுமாறு வலியுறுத்துகின்றார்கள்.

ஆனால் அரசாங்கம் பொருளாதார வீழ்ச்சிக்கு கொவிட்-19 நோய்த் தொற்றுதான் காரணம் என்று ஒரே மந்திரத்தை உச்சாடனம் செய்கிறது.

கடந்த முப்பது ஆண்டு கால அழிவு யுத்தத்திற்கு இவர்கள் செலவிட்ட ஆயிரக்கணக்கான பில்லியன் டொலர்கள் பொருளாதார வளர்ச்சிக்காகப் பாவி க்கப்பட்டிருந்தால் இலங்கை சொர்க்கபுரியாக மாறியிருக்கும்.

இலங்கையின் சமகால பொருளாதார வீழ்ச்சியென்பது வெறும் கொவிட்-19 இனால் மட்டும் ஏற்பட்டது அல்ல. இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து உள்நாட்டில் ஆதிக்க சக்திகள் ஏற்படுத்திக் கொண்ட இனவாதங்களும் ஒடுக்கு முறைகளும் சமச்சீரற்ற பொருளாதார முன்னெடுப்புகளும் இதை வறிய நாடு என்ற பட்டியலுக்குள்ளேயே வைத்துக் கொண்டிருந்தது.

யுத்தம் முடிவடைந்ததற்குப் பின்னரும் இன்று வரையில் பாதுகாப்பு செலவீனம் என்பது யுத்த காலத்திலும் பார்க்க அதி கரித்துக்கொண்டே செல்கின்றது.

அரசாங்கம் ஒட்டுமொத்த மக்களையும் பிச்சைப் பாத்திரம் ஏந்த வைத்துள்ளது.

இன்று எல்லா வகையிலும் தோல்வியுற்ற ஒரு அரசாங் கமாக மாத்திரமல்லாமல், நாட்டை மீளக் கட்டியெழுப்பு வதற்கான எத்தகைய வழியு மின்றி தவிக்கும் வீழ்ச்சிய டைந்த ஒரு அரசாங்கமாகவும் மாறியிருக்கிறது.

ஆட்சி மாற வேண்டும், பொருளாதாரம் வளம் பெற வேண்டும் என்பதிலும் நாங்கள் ஒருமித்த கருத்துள்ளவர்களாகவே இருக்கின்றோம்.

வெறுமனே ஆட்சி மாற்றம் மட்டும் பிரச்சினைக்குத் தீர் வாகாது.

இன, மத பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண் டும் என அவர் தெரிவித்தார். (நி-5)

## சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 97 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா



(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி. தங்கம்மா அப்பாக் குட்டியின் 97 ஆவது பிறந்த நாள் அறக்கொடை விழாவும் சிவத்தமிழ் விருது வழங்கல் நிகழ்வும் நாளை 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இம்முறை யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.பல்கலைக்கழக முன்னாள் வருகை விரிவுரையாளர் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், யாழ். இந்துக் கல்லூரிமுன்னாள்அதிபர் அயஞ்சலிங்கம், வடக்கு- கிழக்கு மாகாண முன்னாள் மேலதிக கல்விப் பணிப்பாளர் ச.அருளானந்தம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஓய்வு நிலை விரிவுரையாளர் திருமதி. சாந்தினி சிவநேசன் ஆகியோர் சிவத்தமிழ் விருது பெறவுள்ளனர்.

இந்நிகழ்வில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, வலி. வடக்கு பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ, யாழ்.போதனா பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, வலிகாமம் கல்வி வலய பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், தெல்லிப்பழை மருத்துவமனை அத்தியட்சகர் ப.திலீபன், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சு.செந்தில் ராஜக் குருக்கள், இணுவில்ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில் அறங்காவலர் சிவஸ்ரீ.இ.சுந்த ரேஸ்வரக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர், ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ள னர். (4-5)

## மாணவ தாதியர் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு

(கொழும்பு)

சுகாதார அமைச்சின் மாணவ தாதியர் பயிற்சிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தகைமை கொண்டுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை 2022.01.31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பங்களை இணையத்தளமூடாக (online) மாத்திரமே அனுப்ப முடியும்.

விண்ணப்பம் தொடர்பான மேலதிக தகவல் பற்றி அறிந்து கொள்ள சுகாதார அமைச்சின் இணை யத்த ளமான W.W.W. health. gov.lk ஐ அணுக முடியும். (4-5)

## விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் 2022 இற்கான விருதுத் தெரிவுகள் மற்றும் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அந்த வகையில் கலைக் குரிசில் விருதுத் தெரிவு - 2022, இளங்கலைஞர் விருதுத் தெரிவு-2022, சிறந்த நூற் பரிசுத் தெரிவு-2022, பதிவு செய்யப்பட்ட கலை மன்றங்களுக்கிடையிலான ஆக்கத் திறன் போட்டிகள்-2022, அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டிகள்-2022, நூற் கொள்வனவு-2022, நடுவர் தெரிவு-2022 ஆகியவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ் விருதுக்கு விண்ணப்பிப்பதற்கு ஆர்வமுடையவர்கள் தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தரைத் தொடர்பு கொண்டு 28.02.2022 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும். மேலதிக தகவலுக்கு 021 205 4105 எனும் தொலை பேசி இலக்கத்தைத் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்பப்படிவங்களை www.np.gov.lk/ www.edumin.np.gov.lk எனும் இணையத்தளங்களின் மூலமாக பெற்றுக் கொள்ள முடியும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார். (4-5)

## "அம்புலு" திரைப்பட இசை வெளியீடு




(யாழ்ப்பாணம்)

ஏ.ஆர்.டிஜிற்றல் ஸ்ரூடியோ அன் புறடக்ஷன்அஜிபன்ராஜ் தயாரிப்பிலும் சுதர்சன்ரட்ணத்தின் இயக்கத்தில் "அம்புலு" ஈழத்து முழு நீளத் திரைப் படத்தின் இசை வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பா ணம் ராஜா சினிமா திரையரங்கில் நடைபெறவுள்ளது.

அப்பா- மகன் பாசப் போராட்டத்தை மையமாகக் கொண்டு பிரமாண்டமாக உருவாக்கப்பட்டுள்ள இத் திரைப் படத்திற்கு ஆர்.வின் பிரசாத் இசையமைத்துள்ளார்.

காஸ்ரோஜிதன், றுவின் பிரசாத், வடகிழகடலோன், கார்த்திக் சிவா ஆகியோரின் பாடலுருவாக்கத்தில் நான்கு பாடல்கள் இத் திரைப்படத்திற்காக உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5)

### வடக்கில் மழைக்கு வாய்ப்பு

## நெல் அறுவடையை முன்கூட்டியே திட்டமிடுவது உகந்தது

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் அடுத்த வாரமளவில் மழையை எதிர்பார்க்க முடியும் என்பதால் விவசாயிகள் நெல் அறுவடையை முன்கூட்டியே திட்டமிடுவது உகந்தது என யாழ்.பல்கலைக்கழகப் புவியியல்துறை விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், வடமாகாணத்தில் தற்போது பனிப் பொழிவு அதிகரித்துள்ளது.

எனினும், எதிர்வரும் 9 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரை வடமாகாணத்தின் பல பகுதிகளில் மழை பெய்யும் வாய்ப்புள்ளது.

தற்போதைக்கு வடமாகாணத்தின் உள்நிலப் பகுதிகளில் குறிப்பாக ஏ-9 வீதியை அண்மித்த பகுதிகளில் இரவு வெப்பநிலை 17 செல்சியஸ் வரை குறைவடையக் கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-5-18-35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப் பரவலாகியுள்ள ஒமிக்ரோனால் நாட்டிற்கு பாரிய அச்சுறுத்தல்!

## பொதுச்சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**எதிர்வரும் இரண்டு வாரங்களில் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை நிச்சயமாக அதிகரிக்கும் எனப் பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.**



இந்த விடயம் குறித்து ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவித்துள்ள அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண, ஒமிக்ரோன் பரவலின் அச்சுறுத்தல் மற்றும் விடுமுறைக் காலங்களில் மக்களின் கவனக்குறைவான நடத்தை காரணமாக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமென குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் பல பகுதிகளில் இருந்து ஒமிக்ரோன் நோயாளர்கள் கண்டறியப்பட்டு முழு தீவுக்கும் பாரிய அச்சுறுத்தலாக உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மறுபுறம் பொது மக்கள் ஒமிக்ரோன் பரவலை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லையென்பது அண்மைக்கால விடுமுறை நாட்களில் மக்கள் செயற்பட்டதில் தெளிவாகிறது.

தற்போது ஒமிக்ரோன் சமூகத்தில் பரவத் தொடங்கியதால், சிந்தப்பட்ட பாலுக்காக அழுவது அபத்தமானது.

எனவே, நாட்டில் ஒரு பெரிய வெடிப்பைத் தடுக்க, பூஸ்டர் டோஸைப் பெறுவதும் சுகாதார நடைமுறைகளை கண்டிப்பாகப் பின்பற்றுவதும்முக்கியமானது என்று அவர் தெரிவித்தார். (நி-5)

## ஒரு கிலோ பச்சை மிளகாய் 1600 ரூபாய்

(மாத்தளை)

மாத்தளையில் ஒரு கிலோ பச்சை மிளகாய் 1600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக சந்தைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட பச்சைமிளகாய் தற்போது 1600 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

அடுத்து வாரங்களில் இது பல மடங்கு அதிகரிக்கலாம் என நுகர்வோர் கவலை வெளியிட்டுள்ளனர். (நி-5)

## தனியார் மயமாகும் புகையிரத சேவை

(கொழும்பு)

நாட்டிலுள்ள புகையிரத சேவையை தனியார் மயமாக்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என புகையிரத தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தத் தீர்மானத்திற்கு எதிராகத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (நி-5)

## 6.9 மில்லியன் டொலர் இவ் ஆண்டு அமெரிக்காவுக்கு செலுத்த வேண்டும்

(கொழும்பு)

இந்த ஆண்டில் 6.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடனாக செலுத்த வேண்டியுள்ளதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்துடன், நடப்பு அரசாங்கத்தினால் குறித்த கடனை உரிய முறையில் திருப்பிச் செலுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

செலுத்தப்பட வேண்டிய கடன் தவணைகள் இதுவரையில் எவ்விதப் பிரச்சினையும் இன்றி செலுத்தப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்திலும் இவ்வாறே செயற்படுவதாகவும் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

கடன் செலுத்தப்படும் அதேவேளை, மக்களுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்தல் போன்ற நடவடிக்கைகளும் உரிய முறையில் மேற்கொள்ளப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

### வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொது அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்தில் நடைபாதை வியாபாரங்கள் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் இதனை மீறி நடைபாதை வியாபாரம் செய்யப்படுமிடத்து பிரதேசசபை உத்தியோகத்தர்களால் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை.**

(C-3436)

### பெயர் மாற்ற அறிவித்தல்

மாவை கலட்டி, கொல்லங்கலட்டி தெல்லிப்பழையை முகவரியாகக் கொண்ட வல்லியன் கந்தன் ஆகிய நான் 06.01.2022 இன்று முதல் எனது பெயரை வல்லியன் கந்தையா எனப் பெயர்மாற்றம் செய்கின்றேன். இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் கந்தையா எனும் பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சனநாயக குடியரசின் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
**வ.கந்தையா**

(9423)

# மணிவிழா வாழ்த்து



### திரு. கணபதிப்பிள்ளை சிவமூர்த்தி

ஆசிரியர், யா/ கைதடி கலைவாணி வித்தியாலயம்
(Tr. Ed-Primary, SLTS-1)

**சேவை விபரம்**

யா/ விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்
1988.10.21-1992.01.19
யா/ கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
1992.01.20-1993.12.31
யா/ எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலை
1994-01.01.-1994.12.31
யா/புங்குடுதீவு ஸ்ரீசண்முகநாதன் வித்தியாலயம்
1995.01.01-1996.05.13
யா/ விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்
1996.05.14-2003.04.01
யா/எருதிடல் அ.த.க.பாடசாலை
2003.04.02-2013.01.16
யா/ கைதடி கலைவாணி வித்தியாலயம்
2013.01.17-2022.01.05

*1988 தொடக்கம் 2022 வரையான சுமார் 34 வருடக் கல்விச்சேவையில் அயராது பணியாற்றி, 2022.01.05 அன்றுடன் சேவையில் நிறைவு கண்டு மணிவிழாக் காணும் விழா நாயகனை வாழ்த்துவதோடு, தமது ஓய்வுக்காலத்திலும் உன்னத நிலை பெற்று, சீரும் சிறப்புடன் உவகையோடு வாழப் பாராட்டிக் கௌரவிக்கின்றோம்*

**வாழ்த்துவோர்:**
**அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகத்தினர், யா/ கைதடி கலைவாணி வித்தியாலயம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 நாட்கள் தனிமைப்படுத்தலை பரிந்துரைக்கும் உலக சுகாதார ஸ்தாபனம்

(ஜெனிவா)

**கொரோனா அறிகுறிகள் ஏற்பட்டு ஐந்து முதல் ஏழு நாட்களுக்குள் பெரும்பாலானோர் குணமடைந்தாலும் 14 நாட்கள் தனிமைப்படுத்தல் அவசியம் என உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரைத்துள்ளது.**

எனினும், தனிமைப்படுத்தல் கால அளவு குறித்து நாடுகள் தங்கள் தனிப்பட்ட சூழ்நிலைகளின் அடிப்படையில் முடிவுகளை எடுக்க வேண்டும் என உலக சுகாதார ஸ்தாபனத்தின் கொரோனாத் தொற்று முகாமைத்துவ குழுவைச் சேர்ந்த அப்டி மொஹமட் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குறைந்த நோய்த் தொற்று உள்ள நாடுகளில் நீண்ட தனிமைப்படுத்தல் காலம் தொற்றாளர்களின் எண்ணிக்கையை முடிந்த வரை குறைவாக வைத்திருக்க உதவும்.

எவ்வாறாயினும் தொற்றுகள் குறைவாக உள்ள இடங்களில், நாடுகளை இயங்க வைப்பதற்காக குறுகிய தனிமைப்படுத்தல்கள் நியாயப்படுத்தப்படலாம்.

இன்புளுவன்ஸா மற்றும் கொரோனா வைரஸ் ஆகிய இரண்டாலும் பாதிக்கப்படுவது சாத்தியம்.

இருப்பினும், இரண்டும் வெவ்வேறு வழிகளில் உடலைத் தாக்கும் தனித்தனி வைரஸ்கள் என்பதால், அவை புதிய வைரஸாக ஒன்றிணைவதில் "சிறிய ஆபத்து" உள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் தகவலின் படி, கடந்த டிசெம்பர் 2 ஆம் திகதி சுமார் 128 நாடுகளில் ஒமிக்ரோன் தொற்று பரவியுள்ளது.

இருப்பினும், மற்ற நாடுகளில் இதே நிலை இருக்காது என மொஹமட் தெரிவித்தார்.

"ஒமிக்ரோன் மாறுபாடு நுரையீரலை விட மேல் சுவாச மண்டலத்தை பாதிக்கிறது என்பதை சமீபத்திய ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. இது ஒரு நல்ல செய்தி. ஆனாலும் அதிக ஆபத்துள்ள நபர்கள் மற்றும் தடுப்பூசி போடாதவர்கள் அந்த மாறுபாட்டிலிருந்து இன்னும் மோசமாக நோய்வாய்ப்படலாம்"


ஒமிக்ரோன் மாறுபாடு சில வாரங்களில் மற்றைய பிறழ்வுகளை முந்திவிடும். குறிப்பாக அதிக எண்ணிக்கையில் பாதிக்கப்படக்கூடிய மக்கள் உள்ள பகுதிகளில் தடுப்பூசி போடாதவர்கள் முதலில் பாதிக்கப்படுவார்கள்.

டென்மார்க்கில், அல்பா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாவதற்கு இரண்டு வாரங்கள் எடுத்துள்ளது.

அதேசமயம் ஒமிக்ரோன் பிறழ்வு தொற்றாளர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாவதற்கு இரண்டு நாட்கள் மட்டுமே எடுத்துள்ளது.

இதுபோன்ற பரவக்கூடிய வைரஸை உலகம் பார்த்ததில்லை" என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

## பிரித்தானிய மகாராணி போல்
# வேடமிட்ட குழந்தை



(லண்டன்)

அமெரிக்க குழந்தை ஒருத்தி, ஹாலோவீன் பண்டிகையின்போது பிரித்தானிய மகாராணியாரைப் போலவே அச்சு அசலாக உடை உடுத்தியிருந்தாள்.

அந்த விடயம் மகாராணியாரை நெகிழ வைத்ததைத் தொடர்ந்து, ஹாலோவீன் பண்டிகையின் போது தன்னைப் போல உடை உடுத்தியதற்காக நன்றி தெரிவித்து அந்தக் குழந்தைக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார் மகாராணியார்.

குழந்தை ஒன்று ஹாலோவீன் பண்டிகையின் போது, பிரித்தானிய மகாராணியாரைப் போலவே உடை உடுத்தி வலம் வர, அவளைப் பார்த்தவர்கள், தலைகளைத் தாழ்த்தி, மகாராணியார் வாழ்க என்று வாழ்த்தியிருக்கிறார்கள்.

இந்தக் காட்சிகளை புகைப்படம் எடுத்த குறித்த குழந்தையின் தாய் ஒரு கடிதம் எழுதி, அதனுடன் இந்தப் புகைப்படங்களையும் இணைத்து அவற்றை பக்கிங்காம் அரண்மனைக்கு அனுப்பி வைத்திருந்தார்.

ஆனால், மகாராணியாரிடமிருந்து தனக்கு கடிதம் வரும் என அவர் கொஞ்சமும் நினைக்கவில்லை.

அந்தப் புகைப்படங்களைப் பார்த்த மகாராணியார், குழந்தைக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

தனக்கு கடிதம் எழுதியதற்காக நன்றி தெரிவித்துள்ள மகாராணியார், குழந்தையின் புகைப்படம் தன்னை மகிழ்ச்சி அடைய செய்ததாக தெரிவித்துள்ளதுடன், அந்தக் குடும்பத்துக்கு தனது கிறிஸ்மஸ் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார். (நி-5)

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை
### இயக்கச்சி சந்தை வளாக கடைகள் 01.02.2022 தொடக்கம் 31.12.2022 வரையான காலப்பகுதிக்கு குத்தகை வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்- 2022

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 06.01.2022 தொடக்கம் 19.01.2022 பிற்பகல் 2.00 மணிவரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 19.01.2022 பிற்பகல் 2.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 19.01.2022 பிற்பகல் 2.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

| இல | கடை இல | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | VS – 04 | 13,750.00 | 3,000.00 | 2,000.00 |
| 02 | PS – 04 | 27,500.00 | 3,000.00 | 2,000.00 |
| 03 | PS – 07 | 22,000.00 | 3,000.00 | 2,000.00 |
| 04 | PS – 08 | 19,250.00 | 3,000.00 | 2,000.00 |
| 05 | PS – 10 | 19,250.00 | 3,000.00 | 2,000.00 |
| 06 | PS – 11 | 17,600.00 | 3,000.00 | 2,000.00 |
| 07 | PS – 12 | 17,600.00 | 3,000.00 | 2,000.00 |
| 08 | PS - 13 | 17,600.00 | 3,000.00 | 2,000.00 |
| 09 | PS - 14 | 17,600.00 | 3,000.00 | 2,000.00 |

**நியந்தனைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்க வேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 19.01.2022 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
05. கடைகளின் கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் ஒப்பந்தத்தினை செய்து கொள்ள வேண்டும். மிகுதி தொகையினை 08 பகுதியாக பிரித்து ஒவ்வொரு மாதக் கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
06. சித்திகர குத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
07. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
08. VS-04 கடை மரக்கறி மற்றும் பழ வியாபாரத்திற்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.
09. கேள்விப் பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளர்/செயலாளருக்கு உண்டு.
10. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**தவிசாளர்**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை.**

(C-3435) **06.01.2022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை ஆரம்ப, முடிவு நேரங்களில்

# மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்

## பாடசாலைச் சமூகம் கோரிக்கை

(முறிகண்டி)

**பாடசாலை ஆரம்பிக்கும், முடிவுறும் நேரங்களில் ஏற்படும் நெரிசலைக் கட்டுப்படுத்தி மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள் என கிளிநொச்சி மகா வித்தியாலய சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.**



கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள குறித்த பாடசாலையானது வடக்கு மாகாணத்தில் அதிக மாணவர் தொகை கொண்ட பாடசாலையாக உள்ளது.

குறித்த பாடசாலை ஆரம்பிக்கும் மற்றும் நிறைவுறும் நேரங்களில் பாரிய நெருக்கமான நிலை காணப்படுகின்றது.

ஏ9 வீதியிலிருந்து 25 மீற்றர் உட்பகுதியில் காணப்படும் குறித்த பாடசாலை, வட்டக்கச்சி செல்லும் பிரதான பாதையில் அமைந்துள்ளது.

இதேவேளை சில அரச திணைக்களங்களும் குறித்த வீதியில் அமைந்து உள்ளன.

இவ்வாறான நிலையில் குறித்த பகுதியில் ஏற்படும் நெரிசலைக் கட்டுப்படுத்தி மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பெற்றோரும், பாடசாலைச் சமூகமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த வீதியை குறிப்பிட்ட நேரங்களில் ஒருவழிப் பாதையாக்குதல், அக்காலப்பகுதியில் கனரக வாகனங்களின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தல், வீதியை மேலும் விஸ்தரித்தல், மாணவர் நடைபாதையினை அமைத்தல், வாகனங்களை பாதையிலிருந்து விலகி உரிய முறையில் நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்தல் போன்றவற்றால் குறித்த நெரிசலைக் கட்டுப்படுத்த முடியும்.

குறித்த விடயம் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாடசாலைச் சமூகம் கோரிக்கையை முன்வைத்துள்ளது. (4-5-100-316)

# கால்நடைகளை கட்டுப்படுத்த தவறின் சட்ட நடவடிக்கை

(அக்கராயன்)

வீதிக்கு வருகின்ற கால்நடைகளை உடனடியாக கட்டுப்படுத்துமாறு பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் அறிவித்துள்ளார்.

ஏ-32 வீதியில் பூநகரி தொடக்கம் முழங்காவில் வரையான பகுதி பூநகரியில் இருந்து பரந்தன் வரையான வீதிகளில் கால்நடைகள் கூடுதலாக நடமாடுவதன் காரணமாக விபத்துகள் ஏற்படுவதுடன் விவசாய முயற்சிகளுக்கும் அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன.

கால்நடைகளை முதன்மை வீதிகளுக்கு அருகில் மேய்ச்சலில் ஈடுபடுத்த வேண்டாம். எதிர்வரும் நாட்களில் வீதிகளில் நடமாடும் கால்நடைகளை பிடிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கால்நடைகளை கண்டபடி வீதிகளில் உலாவ விடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

எனவே கால்நடை வளர்ப்பாளர்கள் கால்நடைகளைக் கட்டுப்படுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் மேலும் தெரிவித்தார். (4-5-350)

## தங்குவதற்கு வீடு இல்லை

# கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் குடியேறிய பெண்ணால் பரபரப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் குடியிருப்பதற்கு வீடு இல்லை எனத் தெரிவித்து வவுனியா தோணிக்கல் கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் வீட்டுப் பொருட்களுடன் வந்து பெண் ஒருவர் தங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியா, தோணிக்கல், ஆலடிப் பகுதியில் பிறிதொரு நபரின் வீட்டில் வசித்து வந்த பெண் ஒருவரை வீட்டுதிருத்த வேலை காரணமாக குறித்த வீட்டு உரிமையாளர் வெளியேற்றியுள்ளார்.

இதனையடுத்து வாகனம் ஒன்றில் தனது வீட்டில் இருந்த பொருட்களை ஏற்றிய குறித்த பெண் வவுனியா, தோணிக்கல் கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் உள்ள அறை ஒன்றில் தனது பொருட்களை இறக்கி வைத்து விட்டு அங்கு தங்கியுள்ளார்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா பிரதேச செயலகத்தின் மகளிர் உத்தியோகத்தர்கள் குறித்த பெண்ணின் நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன், பொலிஸாரிடமும் தெரியப்படுத்தினர்.

குறித்த பெண் மன அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிய வந்ததையடுத்து மருத்துவ பரிசோதனைக்காக அழைத்துச் சென்று வாக்குமூலம் பெற்ற பின் வவுனியா மருத்துவமனையில் அனுமதித்தனர்.

சிகிச்சையின் பின் பெண் தங்குவதற்கான ஒரு இடம் தொடர்பில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்தியுள்ளனர். (4-5-250)

# கசிப்புடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி விசுவமடுப் பகுதியில் சட்டவிரோதக் கசிப்பினை மோட்டார் சைக்களில் புதுக்குடியிருப்புக்கு கொண்டு சென்ற ஒருவர் நேற்று முன்தினம் இரவு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 21 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டதுடன் குறித்த நபரை தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் இராணுவத்தினர் ஒப்படைத்தனர்.

மேலதிக விசாரணையின் பின்னர் குறித்த நபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார். (4-5-316)

# பொதுச்சந்தையை இயங்கவையுங்கள்

## வர்த்தகர்கள், பொதுமக்கள் கோரிக்கை



(கண்டாவளை)

கிளிநொச்சி ஜெயபுரம் பொதுச் சந்தை மூடப்பட்டுள்ளதாகவும் குறித்த சந்தையை இயக்குவதற்கு சம்பந்தப்பட்ட தரப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வர்த்தகர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட குறித்த பொதுச் சந்தையானது கடந்த காலங்களில் இயங்கி வந்தது.

அண்மைய நாட்களாக குறித்த சந்தைக்கு அண்மித்த பகுதிகளிலுள்ள வியாபார நிலையங்களில் மரக்கறி விற்பனைகள் மற்றும் நடமாடும் மீன் வியாபாரம் என்பன இடம் பெறுவதனால் இதனைக் கட்டுப்படுத்தி பொதுச் சந்தையில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பிரதேச சபை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என வர்த்தகர்களும் பிரதேச மக்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த சந்தைத் தொகுதியினை இயங்க வைப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-315)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வளைந்த பாதங்களையுடைய **(Club foot)** குழந்தைகளை முன்கூட்டியே கண்டறிவதற்கான விழிப்புணர்வு கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை 6 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 4 மணி வரை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (4-5)

# தடை செய்யப்பட்ட கிருமிநாசினி தெளித்ததில் நெற்செய்கை அழிவு

(தருமபுரம்)

கிளிநொச்சி முரசுமோட்டை கொரக்கன்காட்டுப் பகுதியில் ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கைக்கு ஒருவரால் தடை செய்யப்பட்ட "ரவுண்டப்" எனப்படும் கிருமிநாசினி தெளிக்கப்பட்டதன் காரணமாக இரண்டு ஏக்கர் வரையான நெற்செய்கை முற்றாக அழிவடைந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நெற்செய்கை மேற்கொண்டவருக்கும் கிருமிநாசினி தெளித்தவருக்கும் இடையிலான முற்பகை காரணமாகவே இச்சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடையவரை இன்றைய தினம் பொலிஸ் நிலையத்திற்கு வருகை தரும்படி பொலிஸார் உத்தரவு பிறப்பித்துள்ளனர். (4-5-316)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேக நபர் உயிரிழப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரொருவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

கல்முனையைச் சேர்ந்த குறித்த சந்தேக நபர் கடந்த வருடம் நவம்பர் மாதம் 23 ஆம் திகதி சுகயீனம் காரணமாக சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அதன்பின்னர் அவர் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக குறித்த சந்தேகநபர் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி முதல் விளக்கமறியலில் வைக்கப்பட்டதாக சிறைச்சாலைகளின் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார். (நி-5)



கடந்த சில தினங்களாக பெய்து வரும் அடைமழை காரணமாக நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கல்லோயா குடியேற்ற கிராமங்களையும் கல்முனை நகரையும் இணைக்கும் கிட்டங்கி வீதியின் மேலாக வெள்ள நீர் பரவ ஆரம்பித்துள்ளதுடன் இவ் வீதியூடாக போக்குவரத்து மேற்கொள்வதில் பிரதேச மக்கள் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



### விரதங்கள்

## வாழ்வில் இன்பம் சேர்க்கும் ஸ்ரீ ஐயப்பன் விரதம்



மகர சங்கராந்தியின் போது சூரியன் மறையும் போது காந்த மலையின் மீது ஜோதி ரூபமாகக் காட்சி கொடுத்து அருள்புரிவேன் என்று சுவாமி ஐயப்பன் கூறுயதாக ஐதீகம். அதனால் அன்று முதல் இன்று வரை ஒவ்வொரு வருடமும் மகர சங்கராந்தியும் அன்று காந்த மலையில் ஐயப்பன் ஜோதி வடிவில் இன்றும் அருள் புரிந்து வருகின்றார்.

### விரத முறைகள்

ஆணவம், கன்மம், மாயை ஆகிய அழுக்குகளை நீக்க வேண்டுமென்றால் விரதம் இருக்க வேண்டும். ஆடம்பர வாழ்க்கையை அகற்ற வேண்டும். எளிய உணவுகளை உண்ண வேண்டும். தன்னை அழகுபடுத்திக் கொள்ளக் கூடாது. யாரிடமும் கோபம் கொள்ளக்கூடாது. இது விரதத்தின் நோக்கம். ஐயப்ப விரதம் மகத்துவம் வாய்ந்தது. சபரி மலைக்குச் செல்லும் பக்தர்கள் கட்டுப்பாட்டுடன் விரதங்களையும் விதி முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

1. சபரிமலை செல்பவர்கள் கார்த்திகை மாதம் முதல் நாள் மாலை அணிய வேண்டும்.
2. துளசி மணி மாலை 108 கொண்டதாகவோ உத்திராட்ச மணி 54 உள்ளதாகவோ வாங்கி அதில் ஐயப்பன் திருவுருவம் பதித்த பதக்கம் ஒன்றையும் இணைத்து அணிய வேண்டும்.
3. குருசாமி ஒருவரின் கையால் கோவிலில் பூசை செய்து மாலை அணிய வேண்டும்.
4. அதிகாலை எழுந்து குளிர்ந்த நீரால் நீராடி ஐயப்பனை 108 சரணம் கூறி பூஜை செய்ய வேண்டும்.
5. மாலை அணிந்த பின் சைவ உணவு மட்டும் உண்ண வேண்டும். மது அருந்தக் கூடாது, மாமிசம் உண்ணக் கூடாது, கோபதாபம், விரோதம், குரோதம் கொள்ளக் கூடாது.
6. பீடி, சிகரெட் அறவே நீக்கிவிட வேண்டும்.
7. கறுப்பு, நீலம், பச்சை, காவி போன்றவற்றில் ஒரு நிற வேட்டியையும் சட்டையையும் அணிய வேண்டும்.
8. இரவில் தூங்கும் போது தலையணை, மெத்தை உபயோகிக்கக் கூடாது.
9. பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.
10. மற்றவர்களிடம் பேசும் போது சாமி சரணம் எனத் தொடங்கி முடியும் போது சாமி சரணம் எனக் கூற வேண்டும்.
11. மாலை அணிந்த பின் தங்களின் வசதிக்கேற்ப வீடுகளில் பூஜை நடத்தி அன்னதானம் செய்ய வேண்டும்.
12. காலணி, குடை முதலிய பொருட்கள் உபயோகிப்பதைத் தவிர்க்க வேண்டும்.
13. திரைப்படம் பார்க்கக் கூடாது.
14. கன்னி சுவாமிகள் கன்னி பூஜை நடத்தி அன்னதானம் செய்ய வேண்டும்.
15. தனது நெருங்கிய உறவினர்கள் மரணம் போன்ற துக்க காரியங்களில் கலந்து கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டால் மாலையை கழற்றிவிட வேண்டும். பெண்களது மங்கல சடங்கு வீடுகளுக்கு செல்லக் கூடாது. (தொடரும்)

# செய்த்துளிகள்

## நீதிமன்ற அவமதிப்பு

## கைதான துமிந்த பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். கடுவலை நீதவான் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட பகிரங்க பிடியாணைக்கு அமைய அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ கடுவலை நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இதன்போது அவரை 5 இலட்சம் ரூபாய்பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல கடுவலை நீதவானும் மாவட்ட நீதிபதியுமான சமத் தசநாயக்க அனுமதித்தார். (நி-5)

## வெடி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

(கண்டி)

கண்டியில் அமைந்துள்ள விடுதியொன்றில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விடுதியின் உணவகத்தில் உள்ள எயார் கன்டிஷன் பழுது பார்க்கும் போது குறித்த வெடிப்பு சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பேராதனை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-5)

## ராஜித சேனாரத்னவிற்கு கொரோனா உறுதி

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவிற்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 320 | 280 | 300 |
| உருளைக்கிழங்கு | 160 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 900 | 800 | 900 |
| தக்காளி | 200 | 180 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 50 |
| கோவா | 300 | 260 | 300 |
| கரட் | 350 | 480 | 600 |
| பூசணி | 80 | 70 | 120 |
| புடோல் | 250 | 150 | 320 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 350 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 150 |
| பாகற்காய் | 400 | 350 | 800 |
| வெண்டிக்காய் | 240 | 160 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 200 | 240 | 250 |
| லீக்ஸ் | 340 | 280 | 400 |
| பீற்றூட் | -- | -- | 500 |
| கறிமிளகாய் | 650 | 600 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | 1000 |
| போஞ்சி | 350 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 280 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 80 |
| தேசிக்காய் | 250 | 180 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 260 | 200 |
| வெங்காயப்பூ | 450 | 500 | -- |
| முள்ளங்கி | 150 | 100 | 240 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 50 |
| வல்லாரை | 30 | 32 | 40 |
| ஈரப்பலா | 80 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3,000 இற்கும் அதிகமான
# வன்முறைச் சம்பவங்கள் சென்ற ஆண்டில் பதிவு

(கொழும்பு)

**சிறுவர் மீதான வன்முறைகள் தொடர்பில் கடந்த ஆண்டு 3,373 முறைப்பாடுகள் தங்களுக்கு கிடைத்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.**

அவற்றில் 598 முறைப்பாடுகள், 5 வயதிற்கும் குறைந்த சிறுவர்கள் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவங்கள் தொடர்பானவை. வன்முறைக்கு உள்ளான சிறுவர்களில், 1,342 பேர் தமது தந்தையாலும் 718 பேர் தாயாலும் உறவினர் மற்றும் உறவினர் அல்லாதோர்களால் 715 பேரும் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களினால், சிறுவர்கள் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பான 98 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. (நி-5)

# ஒவ்வொரு டொலருக்கும் 240 ரூபாய் வழங்க வேண்டும்

## டொலர் நெருக்கடிக்கு சிறந்த தீர்வு என்கிறார் நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

இலங்கைக்கு அந்நிய செலாவணிகளைக் கொண்டு வரும் ஊழியர்கள் அனுப்பும் ஒவ்வொரு டொலருக்கும் 240 ரூபாய் வழங்க வேண்டும் என தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அதற்கான நடவடிக்கைகளை திறைசேரி மேற்கொள்ள வேண்டும். நாடு முகம்கொடுத்துள்ள டொலர் நெருக்கடிக்கு சிறந்த தீர்வு அதுவென அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டில் இருந்து அனுப்பப்படும் டொலருக்கு அவ்வாறான அதிக பணம் வழங்கப்பட்டால் மக்கள் நிச்சயமாக சரியான முறையில் பணத்தை அனுப்புவார்கள்.

உண்டியல் முறையில் பணம் அனுப்பும் பழக்கத்தில் இருந்து அவர்களை விடுபட வைக்க முடியும் என அவர் தெரிவித்தார்.



இதனால் நாங்கள் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்திற்கான சிறந்த பலனை பெறுவதற்கு திறைசேரி நடவடிக்கை மேற்கொள்ளும் என எதிர்பார்ப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# சுகாதார சேவைகளுக்கு '1907' ஐ அழைக்கவும்

(கொழும்பு)

"சுவ சவன" எனப்படும் சுகாதார அமைச்சின் அவசர தொலைபேசி சேவை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டது.

சுகாதார சேவை தொடர்பான மக்களின் கருத்துக்கள், முறைப்பாடுகள், ஆலோசனைகள், குற்றச்சாட்டுக்கள் மற்றும் குறைகளை உடனடியாக சுகாதார அமைச்சுக்கு தெரிவிக்கும் புதிய வழிமுறையாக இந்த சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, 1907 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பொதுமக்களுக்கு தமது ஆலோசனைகள் மற்றும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியும். (நி-5)

# டொலர் பற்றாக்குறையை அடுத்து சோள இறக்குமதியும் இடைநிறுத்தம்

(கொழும்பு)

டொலர் பற்றாக்குறை காரணமாக சோளத்தை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தேசிய மிருகவள அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

குறித்த சபையினால் பராமரிக்கப்படும் கால்நடைகளுக்கு அவசியமான ஆயிரத்து 500 மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்வதிலேயே சிக்கல் நிலவுவதாக அந்த சபையின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள சுமித் கமகே தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சோளத்தை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கத்தின் அனுமதி கிடைத்துள்ள போதிலும் அதனை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதனையடுத்து, பயிர்ச் செய்கையாளர்களிடம் இருந்து சோளப் பயிரைக் கொள்வனவு செய்து கால்நடைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக மிருகவள அபிவிருத்தி சபையின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள சுமித் கமகே தெரிவித்துள்ளார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நாம் ஆட்சி செய்வோம்

தங்களைத் தாங்கள் ஆளத் தெரியாதவர்களாக இருந்து கொண்டு குடும்பத்தையும் அலுவலகத்தையும் ஊரையும் உலகத்தையும் ஆள நினைப்பது எவ்வளவு பேதமைத்தனம்.

நாம் நம்மை ஆள்வது என்பது வேறு ஒன்றுமல்ல. நம்முடைய உள் மனம் ஒன்று சொல்ல புற மனம் ஒன்றும் சொல்லாமல் இரண்டும் ஒன்றுபட்டுப் போவதே நம்மை நாம் ஆள்வது.

உள் மனத்துக்கும் பிற மனத்துக்கும் இடையே எப்போதும் போராட்டம் இருக்குமானால் செய்வதறியாது திகைத்து நின்று சோம்பித் திரிய வேண்டியதுதான்.

இன்னும் தெளிவாகக் கூற வேண்டுமானால் உணர்ச்சிகள், உள்ளுணர்வுகள் நம்மை ஆளக்கூடாது. நாம் தான் அவற்றை ஆள வேண்டும்.

கட்டுப்பாடற்ற நம் உணர்வுகள் நம்மையும் நம்மைச் சுற்றியிருப்பவர்களையும் மிகவும் பாதிக்கின்றன.

மிதமிஞ்சிய உணர்வு நிலைகள் உடல் நிலையைப் பாதிக்கின்றன என்பது மருத்துவம் கூறும் மறுக்கவியலாத உண்மை.

இவற்றை உணர்ந்தும் நாம் உணர்ச்சி வசப்படுவானேன்?

மிதமிஞ்சிய மகிழ்ச்சி அடக்கவியலாத வருத்தம், எல்லையில்லாக் கவலை, கட்டுப்பாடில்லாக் கோபம், என்ன செய்கிறோம் என்றறியவியலாத பழிவாங்கும் உணர்ச்சி ஆகியவை புயல் காற்றில் சிக்கிய இலவம் பஞ்சென நம்மை ஆட்டிப்படைக்கின்றன.

இது அவசியம்தானா? எப்போதெல்லாம் உணர்ச்சிகள் நம்மை ஆட்டிப் படைக்கின்றனவோ அப்போதெல்லாம் நமக்கு நாமே பகையாகின்றோம் என்ற எண்ணம் மேலோங்க வேண்டும்.

முதலாவதாக, உணர்ச்சிகள் உச்சக்கட்டம் ஏற்படக் காரணமாயிருக்கும் இடத்திலிருந்து ஒரு விநாடி கூடத் தாமதமின்றி வேறிடத்திற்கு மாற வேண்டும்.

நான் சுய கட்டுப்பாட்டிற்குள் தான் இருக்கிறேன். என்னை என்னால் ஆள முடியும் ஆகிய இரு தாரக மந்திரங்களையும் விரைந்து சொல்லிப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அவற்றை ஏதோ இயந்திரமயமாகச் சொல்லிக் கொண்டிராமல் உணர்ந்து சொல்ல வேண்டும்.

அப்படிச் சொல்லும் போது தன்னம்பிக்கையின் தோனி தெறித்து விழ வேண்டும். இரண்டாம் நினைப்புக்கு இடம் கொடுக்கவே கூடாது. அப்புறம் எங்கும் எதிலும் உங்கள் ஆட்சி தான்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## திருடன்



எருக்கூர் என்னும் ஊரில் நீலகண்டன் என்பவன் தன் மனைவியோடு வாழ்ந்து வந்தான். அந்த ஊரில் திருடர்கள் நடமாட்டம் அதிகமாக இருந்தது.

அவர்களிடம் விலை உயர்ந்த பொருட்களைப் பறி கொடுத்தவர்கள் அரசரிடம் அழுது புலம்பினர்.

அந்தத் திருடர்களைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு, நூறு பொற்காசுகள் பரிசு என்று அறிவித்தார் அரசர்.

காவல் இருந்த வீரர்கள் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தனர். அவர்களால் திருடர்களைப் பிடிக்க முடியவில்லை.

ஒருநாள் இரவு, நீலகண்டனும், அவர் மனைவியும் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தனர். ஜன்னலைத் திறப்பது போன்ற ஓசை கேட்டு நீலகண்டனின் மனைவி விழித்துக் கொண்டாள்.

"எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்! நம் வீட்டிற்குள் திருடர்கள் வந்து விட்டனர்.. எழுந்திருங்கள்" என்று அவனை உலுக்கி எழுப்பினாள்.

எழுந்த அவன் பாதுகாப்பிற்காகத் தடியைத் தேடினான். அப்போது திருடன் ஒருவன் ஜன்னல் வழியாக உள்ளே வந்தான். அவன் கையில் பளபளவென்று கத்தி மின்னியது.

அவர்கள்இருவரையும் பார்த்த அவன், "என்னை எதிர்க்க முயற்சி செய்யாதீர்கள். வீட்டில் உள்ள நகைகளையும், பணத்தையும் தந்து விடுங்கள். உங்களை ஒன்றும் செய்ய மாட்டேன். ஏதேனும் மீறி நடந்தால், இந்தக் கத்தியால் குத்திக் கொன்று விடுவேன்" என்று மிரட்டினான்.

துணிவை வரவழைத்துக் கொண்ட நீலகண்டன், "நீ சொன்னது போலவே நடந்து கொள்கிறோம். நம் நகரத்தையே நடுங்க வைக்கும் திருடர் கூட்டத்தில் நீயும் ஒருவனா? ஏன் தனியாக வந்திருக்கிறாய்?" என்று கேட்டான்.

"நான் அந்தத் திருடர் கூட்டத்தைச் சேர்ந்தவன் அல்ல. சில்லறைத் திருட்டுகள் செய்பவன். அதனால்தான் இப்படிப்பட்ட வீடாகப் பார்த்துத் திருடுகிறேன். வீண் பேச்சுப் பேச வேண்டாம். உடனே நகைளை எடுத்துத் தா" என்று மிரட்டினான் அவன். "கொண்டு வருகிறேன்" என்ற நீலகண்டன் அடுத்த அறைக்குள் சென்றான். நகைகளை எடுப்பதற்காக அலுமாரியைத் திறந்தான்.

அப்போது அந்த வீட்டின் முன் பக்கக் கதவை யாரோ இடிப்பது போன்ற ஓசை கேட்டது. இதைக் கேட்ட திருடன் அஞ்சி நடுங்கினான்.

"ஐயோ! அந்தத் திருடர்கள் கூட்டம்தான் வந்து விட்டது. அவர்கள் என்னைப் பார்த்தால் உயிருடன் விட மாட்டார்கள். என்ன செய்வேன்? இங்கே வந்து மாட்டிக்கொண்டேனே.." என்று புலம்பினான். இதைக் கேட்ட நீலகண்டன்நல்ல வாய்ப்பு கிடைத்தது என்று மகிழ்ந்தான்.

(தொடரும்)

# மகாபாரதம்

**295**



கௌதமி வேடனை நோக்கி, "பகைவர்களைக் கொல்வதால் என்ன இலாபம் கிடைக்கும்? கையில் அகப்பட்ட பகைவனை விடாமல் இருப்பதால் எத்தகைய மகிழ்ச்சியை அடைவாய்?

பாம்பின் விடயத்தில் நான் ஏன் பொறுமையாக இருக்கிறேன்? இது முக்திக்கு உரிய சாதனம். ஆதலால் நான் பொறுமை இழக்கவில்லை" என்றாள்.

வேடன், "கௌதமி! தேவேந்திரன் விருத்ராசுரனைக் கொன்று மேன்மை அடைந்தான் அல்லவா?

சிவபெருமானும் யக்ஞ புருஷனைக் கொன்றார் அல்லவா? தேவர்கள் செய்ததை நாமும் செய்தால் என்ன? விரைந்து பாம்பைக் கொல்வேன்" என்றான்.

என்னதான் வேடன் வற்புறுத்திய போதும் உத்தமியான கௌதமி பாம்பைக் கொல்ல உடன்படவில்லை. சுருக்குக் கயிற்றில் சிக்கித் தவித்த பாம்பு இப்போது பேசத் தொடங்கியது.

"அர்ச்சுனகா.. அறியாதவனே..இந்தக் குழந்தையைக் கொன்றதில் நான் செய்த பிழை என்ன? எமன் ஏவலின்படி செய்தேன். இந்தக் குழந்தையிடம் எனக்கு பகை ஒன்றும் இல்லை. இதில் யாராவது பாவம் செய்திருந்தால் அது எமனைச் சாரும்" என்று பாம்பு கூறியது.

வேடன், "பாம்பே..நீ வேறொருவர் கட்டளைப்படி இதைச் செய்திருந்தாலும், இந்தத் தீமையில் உனக்கும் பங்கு உண்டு. ஆதலால் நீயும் குற்றவாளிதான்.

ஒரு மண் பாத்திரம் செய்யத் தடி, சக்கரம். ஆகியவை காரணமாய் அமைவது போல நீயும் காரணமாகிறாய்" என்றான்.

பாம்பு, "வேடனே அந்த மண் பாத்திரம் செய்யத் தடி, சக்கரம் ஆகியவை தாமே காரணமாகாது. அது போலத்தான் நானும்.

ஆகவே என் மீது குற்றம் காணாதே குற்றவாளி என என்னைக் கருதித் துன்புறுத்துவது நல்லதல்ல.

பிழை உண்டு எனக் கருதினால் அந்தப் பிழை பொதுவானதாகும். நான் மட்டுமே காரணமில்லை" என்று கூறிற்று.

வேடன், "பாம்பே இதற்கு நான் காரணமில்லை" என வாதாடுவதால் ஒரு பலனுமில்லை. இந்தக் கொலையை நீ செய்திருக்கிறாய். ஆதலால் நீ கொல்லத்தக்கவனே" என்றான்.

பாம்பு, "வேடனே உண்மையில் நானும் காரணம் என நீ கருதினால், என்னை இந்தக் காரியத்தில் ஈடுபடுத்திய ஒருவன் இருக்க வேண்டுமல்லவா? இப்படியிருக்க என்னைக் கொல்வதால் உனக்கு என்ன இலாபம்" என்று கேட்டது.

வேடன், "கெட்ட புத்தியுள்ள பாம்பே குழந்தையைக் கொன்ற கொலை பாதகனாகிய நீ என்னால் கொல்லத் தக்கவனே.. கொலைகாரனான உனக்குப் பேச என்ன தகுதி இருக்கிறது? என்றான்.

பாம்பு, "வேடனே யாகத்தில் ஹோமம் செய்கிறவர் எப்படிப் பயனை அடைவதில்லையோ, அப்படியே நானும் இதன் பயனைப் பெறத் தக்கவன் அல்லன்" என்று பதில் கூறியது.

இவ்வாறு பாம்பு சொல்லும் போது எமன் அங்கு வந்து அதனை நோக்கி, "பாம்பே..நான் காலத்தால் ஏவப்பட்டு உனக்குக் கட்டளையிட்டேன். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> சூரியனாக பிரகாசிக்க சந்தர்ப்பம் இருக்கும்போது ஏன் மெழுகுவர்த்தியைப்போல் வெளிச்சம் தர வேண்டும். – நெப்போலியன் ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் அரச அதிகாரிகள் மனம் வைத்தால் எங்களின்...

அரசியல்வாதிகளால் செய்ய முடியாத பல காரியங்களை அதிகாரிகளால் செய்ய முடியும் என்பது நிறுதிட்டமான உண்மை. இதற்குப் பல உதாரணங்களைக் கூற முடியும்.

குறிப்பாக, எம் தமிழ் மக்களின் கல்விக் கலாபீடமாக இருக்கக்கூடிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இது விடயத்தில் மிகப் பெரும் பயனுறுதிமிக்க விடயங்களை ஆற்றவும் ஆக்கவும் கூடிய களத்தைக் கொண்டுள்ளது.

பட்டப்படிப்புகள், ஆராய்ச்சிகள், ஆய்வுகள், கலைகலாசார விழுமியங்கள், தொழிற் றுறை பயிற்சிகள் என இன்னோரன்ன விடயங்களோடு இளம் சமூகத்தை பயனுறுதி மிக்க இயங்குநிலைக்கு ஆளாக்க முடியும்.

ஆம், 1993ஆம் ஆண்டு பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்பை ஆரம்பித்தார்.

அன்றைய சூழ்நிலையில், பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத இளைஞர்கள் தாம் என்ன செய்வது என்று திண்டாடிக் கொண்டிருந்தவேளை; வெளிவாரிப் பட்டப்படிப்பு அலகு ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக ஏகப்பட்ட இளைஞர் யுவதிகள் பட்டப்படிப்பை மேற்கொண்டனர்.

அது அவர்களுக்கு நம்பிக்கை அளித் தது. பட்டம் பெறவேண்டும்,வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற ஆவலைத் தூண்டியது.

பல்கலைக்கழகம் என்ற நான்கு சுவர்களுக்குள் நின்று கொள்ளாமல், எங்கள் தமிழ்ச் சமூகத்துக்குப் பல்கலைக்கழகத்தின் அனுகூலங்கள் கிடைக்க வேண்டும் என்ற பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் சிந்தனை மிகப்பெரும் சாதனையை ஏற்படுத்தியது.

இதுபோல மாகாண அமைச்சுகள், அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள், வங்கிகள், மின்சார சபை, கமத்தொழில் அமைப்பு, வீதி நிர்மாணம் சார்ந்த அமைப்புகள், கால்நடை உற்பத்தித் திணைக்களம் உள்ளிட்ட அமைப்புகளும் அவற்றின் அதிகாரமளிக்கப்பட்ட நிர்வாகங்களும் மனம் வைத்தால், எங்கள் தமிழர் தாயகத்தில் முதலீடு அதிகரிக்கும். சுயதொழில் முயற்சிகள் கைகூடும். விவசாயம் பெருகும். கடற்றொழில் வளம் கொழிக்கும், கால்நடை உற்பத்தி அதிகரிக்கும். மின் உற்பத்தியில் ஒவ்வொரு வீடும் பங்கேற்கும், குடிசைக் கைத்தொழில் வளம் பெறும்.

இவை நடந்தால் எமது கல்வி, பொருளாதார, சமூக அபிவிருத்தி உச்சமாகும்.

எனினும் அதிகாரிகள் பலரும் இது விடயத்தில் பின்னடிப்பவர்களாக இருப்பதுதான் மிகப்பெரும் துரதிர்ஷ்டம்.

இதை இன்னும் சுருக்கமாகக் கூறுவதாயின், நம்மவர்களே நம்மை வீழ்த்தப்போதும் என்பதாகவே நிலைமை இருக்கிறது.

அன்புக்குரிய அதிகாரிகளே! உங்கள் அதிகாரத்தைக் கையிலெடுத்து நல்லவற்றைச் செய்யுங்கள். எங்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவுங்கள்.

மக்களுக்குக் கிடைப்பதை எந்தக் கட்டத்திலும் தடுத்து நிறுத்தாதீர்கள். இதை நீங்கள் செய்வீர்களாயின், அந்த இறைவன் உங்களுக்குரிய உயர் பதவியை எழுமையின் போதெல்லாம் தருவான். இது ஐயன் வள்ளுவன் மீது சத்தியம்.

## பகிடிவதையில் ஈடுபட்ட மாணவன் பல்கலைக்குள் உள்நுழையத் தடை

### விடுதியைவிட்டு வெளியேறவும் பணிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன் ஒருவர், புதுமுக மாணவர்கள் மீது பகிடிவதையில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் மறு அறிவித்தல் வரை - விசாரணைகள் முடியும் வரை பல்கலைக்கழகத்தின் எந்தவொரு பகுதிக்கும் உள்நுழைய முடியாதபடி தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த மாணவனை உடனடியாக விடுதியில் இருந்தும் வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த பெரும்பான்மை இன சிரேஷ்ட மாணவன் ஒருவர் மீதே விஞ்ஞான பீடாதிபதியினால் இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை அதிகாலை 2 மணியளவில், புதுமுக மாணவர்களைப் பகிடிவதைக்கு உள்ளாக்கியதுடன் மாணவர்கள் மீது தாக்குதல் நடாத்தியதாகவும் குறித்த சிரேஷ்ட மாணவன் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒழுக்காற்று உத்தியோகத்தர்கள், மாணவர் நலச்சேவை அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதுடன் விசாரணைகள் முடியும் வரை குறித்த மாணவன் உள்நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று விஞ்ஞானபீட பீடாதிபதியினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம -18, 33)

## தென்மராட்சி கெற்பேலியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

தென்மராட்சி கெற்பேலிப் பகுதியில் ஒரு கிலோகிராம் கஞ்சாவுடன் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபர் மற்றும் மீட்கப்பட்ட கஞ்சா ஆகியவற்றை சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர்.(ம-30)

## பருத்தித்துறை வீதியில் இளைஞன் மீது தாக்குதல்

(சாவகச்சேரி)

கொடிகாமம்-பருத்தித்துறை வீதியில் நேற்று புதன்கிழமை மதியம் இனந்தெரியாத நபர்களால் இளைஞன் ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மிருசுவில் புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த 25 வயதான இளைஞனே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகி தலைப் பகுதியில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-30)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** குருக்களூர் மன்னார் வீதி, சூடு வெந்தபுலவு ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

## ஜனவரி 21 முதல் 23 வரை யாழ்.சர்வதேச வர்த்தக கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 12 ஆவது முறையாக எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை முற்றவெளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

லங்கா கண்காட்சி மற்றும் மாநாட்டு சேவைகள் நிறுவனம் யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறையினர் தமது உற்பத்திகளை சர்வதேச ரீதியில் சந்தைப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாகவும் பொருட்கள் மற்றும் சேவைகளை உள்ளடக்கிய வர்த்தக நடவடிக்கையாக இக் கண்காட்சி அமையவுள்ளது.

பல்லின வர்த்தக தொழில் துறைக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ள இக்கண்காட்சியில் குறிப்பாக விவசாயம், மருத்துவமனை, உணவு இயந்திரம், கட்டுமானம், இலத்திரனியல் தொடர்பிலான பொருட்கள், சேவைகள் போன்றன காட்சிப்படுத்தப்படவுள்ளன.

நீண்டகாலமாக உயர் கல்வி பெறும் வாய்ப்புக்காக காத்திருப்பவர்கள் கல்வி என்னும் தலைப்பில் பல உயர்கல்வி வழங்கும் நிறுவனங்கள் இக் கண்காட்சியில் இடம் பெறவுள்ளன. கண்காட்சி தொடர்பான மேலதிக தகவல்களுக்கு www.jitf.lk என்ற இணையத்தளம் மூலம் அல்லது 077 109 3792 என்ற தொலைபேசி எண்ணின் மூலம் தொடர்பு கொள்ள முடியும் என்றும் ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (4-5-33)

## சத்திய தரிசனம்

### தியானத்தில் ஆழ்ந்து விடுங்கள்



- உங்கள் கடமைகளையும் தர்மங்களையும் ஆண்டவனுக்கு ஆராதனையாக அர்ப்பணித்து தொண்டாற்ற வேண்டும். நீங்கள் வெளியிடும் ஒவ்வொரு மூச்சும் ஐயன் திருவடிகளுக்குச் சமர்ப்பிக்கும் சுகந்த மலராக எண்ணி அர்ப்பணிக்க வேண்டும். இறைவன் அளித்த ஆயுட்காலத்தைப் பயனுள்ளதாக்க வேண்டும். எத்துயர்வரினும் தெய்வத்தின் மீது நம்பிக்கை இழக்கலாகாது.
- தியானத்தினால் நீங்கள் மனித குல ஒற்றுமையையும் தெய்வத்தின் எல்லையற்ற சக்தி எங்கும்பரவியிருப்பதையும் உணர்வதுடன் அதிலேயே ஆழ்ந்துவிடலாம். உங்களது அன்றாட வாழ்க்கை அனுபவத்தில் ஒரு பெரிய கவலை தோன்றியதும் அதுவரை உங்களைப் பற்றியிருந்த சிறிய கவலைகளை அது ஒடுக்கிவிடுவதை உணர்ந்திருப்பீர்கள். உங்கள் மனதில் தெய்வத்தைப் பற்றிய சிந்தனையே நிறைந்திருந்தால் தெய்வத்திற்காகவே நீங்கள் முழுமனதுடன் எப்போதும் இடைவிடாது ஏங்கிக் கொண்டிருந்தால் மற்ற அற்ப ஆசைகளும் சாதனைகளும் தோல்விகளும் கூட உங்களை பாதிக்கமாட்டா. அவையாவும் உங்கள் கவனத்திலிருந்து நீங்கிவிடும். தெய்வசிந்தனை என்ற வெள்ளத்தில் மூழ்கி விரைவிலேயே தெய்வத்தை உணர்தல் எனும் பேரானந்தப் பெருங்கடலில் மூழ்கும் நிலையை அடைவீர்கள்.
- [illegible] புரிந்து கொள்ள முடியாது. நீங்கள் செய்யக் கூடிய தலைசிறந்த காரியம் இதில் மூழ்கிப் போவதுதான். [illegible] பயனில்லை. மூழ்கி ஆழத்தை அறி. உண்டு சுவையை அறி. அப்போதே நீ என்னைப் பற்றி உன் இதயம் திருப்தி கொள்ளும் வரை அலசிப் பேசலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

47

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



தமிழ் மற்றும் கிரந்த உயிர் எழுத்துக்கள் உரு -a யில் காட்டப்பட்டுள்ளன. தமிழில் உயிரெழுத்து இல்லாத கிரந்த எழுத்துக்கள் உரு-b யில் காட்டப்பட்டுள்ளன. ஏ மற்றும் ஓ வுக்கு கிரந்த எழுத்துக்கள் இல்லாத போதும் மலையாளம் மற்றும் சிங்களத்தில் எழுத்துக்கள் உண்டு.

**உரு-b தமிழில் உயிரெழுத்தில்லாத கிரந்த எழுத்துக்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| கிரந்தம் | 𑌋 | 𑍠 | 𑌌 | 𑍡 |
| மலையாளம் | ഋ | ൠ | ഌ | ൡ |
| சிங்களம் | ඍ | ඎ | ඏ | ඐ |
| இலத்தின் | ṛ | ṝ | ḷ | ḹ |

**தமிழைப்பொருத்த வரையில் மணிப்பவள எழுத்து நடை மறைந்தாலும், 'ஸ', 'ஜ', 'க்ஷ', 'ஷ', 'ஶ்ரீ', 'ஹ' போன்ற கிரந்த எழுத்துக்கள் வடமொழிச் சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் உச்சரிப்புக்கு ஏற்ப குறிக்க இன்றும் பயன் படுத்தப் படுகின்றன. இவை தற்போதும் தமிழ் எழுத்துக்களுடன் சேர்த்து எழுதப்படுவதைக் காணலாம்.**

தமிழ் மற்றும் கிரந்த உயிர் மெய் எழுத்துக்கள் உரு-c யில் காட்டப்பட்டுள்ளன. தமிழில் உயிரெழுத்து இல்லாத கிரந்த எழுத்துக்கள் உரு-d யில் காட்டப்பட்டுள்ளன. ழ, ற மற்றும் ன வுக்கு கிரந்த எழுத்துக்களும் சிங்கள எழுத்துக்களும் இல்லை. ஆனால் மலையாளத்தில் எழுத்துக்கள் உண்டு.

**உரு d தமிழில் இல்லாத கிரந்த எழுத்துக்கள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கிரந்தம் | 𑌖 | 𑌗 | 𑌘 | 𑌛 | 𑌜 | 𑌝 | 𑌠 |
| மலையாளம் | ഖ | ഗ | ഘ | ഛ | ജ | ഝ | ഠ |
| சிங்களம் | ඛ | ග | ඝ | ඡ | ජ | ඣ | ඨ |
| இலத்தின் | kha | ga | gha | cha | ja | jha | ṭha |
| கிரந்தம் | 𑌡 | 𑌢 | 𑌥 | 𑌦 | 𑌧 | 𑌫 | 𑌬 |
| மலையாளம் | ഡ | ഢ | ഥ | ദ | ധ | ഫ | ബ |
| சிங்களம் | ඩ | ඪ | ථ | ද | ධ | ඵ | බ |
| இலத்தின் | ḍa | ḍha | tha | da | dha | pha | ba |
| கிரந்தம் | 𑌭 | 𑌶 | 𑌷 | 𑌸 | 𑌹 | | |
| மலையாளம் | ഭ | ശ | ഷ | സ | ഹ | | |
| சிங்களம் | භ | ශ | ෂ | ස | හ | | |
| இலத்தின் | bha | śa | ṣa | sa | ha | | |

## தமிழில் கலந்துள்ள வட சொற்கள் பற்றி....

**உரு c தமிழ் மற்றும் கிரந்த உயிர் மெய்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தமிழ் | க | ங | ச | ஞ | ட | ண |
| கிரந்தம் | 𑌕 | 𑌙 | 𑌚 | 𑌞 | 𑌟 | 𑌣 |
| தமிழ் | த | ந | ப | ம | ய | ர |
| கிரந்தம் | 𑌤 | 𑌨 | 𑌪 | 𑌮 | 𑌯 | 𑌰 |
| தமிழ் | ல | வ | ழ | ள | ற | ன |
| கிரந்தம் | 𑌲 | 𑌵 | - | 𑌳 | - | - |

ஒரு மொழியானது தனக்குள்ளாகவே சொல்வளம் மிகுந்திருப்பது. அதிலும் நம் தமிழைப் போன்ற தொன்மையான மொழியில் சொற்களுக்குப் பஞ்சமே இல்லை. தமிழில் மூன்று இலட்சம் முதல் ஆறு இலட்சம் வரையிலான சொற்கள் இருந்தன என்கிறார்கள். ஆனால், அவ்வளவு சொற்களும் தமிழ் மொழிய கராதிகளில் பட்டியலிடப்படவில்லை. இன்றைக்கு ஆங்கிலம் எப்படித் தமிழோடு தொடர்ந்து கலந்து வருகிறதோ அவ்வாறே சமஸ்கிருதம் எனப்படும் வடமொழியும் உருதும் தொடர்ந்து கலந்தன. (சமஸ்கிருத மொழியிலிருந்து தமிழ்மொழியில் கலந்து வரும் சொற்கள் வடசொற்கள் எனப்படும்.)

இன்றைக்குத் தமிழில் கலந்துள்ள ஆங்கிலச் சொற்களை எளிதில் அடையாளம் கண்டு பிடித்துவிடலாம். காபி, டீ, பஸ், ஸ்கூல், சைக்கிள் என்று பல ஆங்கிலச் சொற்களை நாம் அன்றாடம் பயன்படுத்தினாலும், அவை ஆங்கிலச் சொற்களே என்பது நமக்கு நன்கு தெரியும்.

காபி என்பதற்குக் குளம்பி என்றும், டீ என்பதற்குத் தேநீர் என்றும், பேருந்து, பள்ளி, மிதிவண்டி என்றும் அச்சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தவும் அறிந்திருக்கிறோம். ஆனால், தமிழில் கலந்துள்ள வடமொழிச் சொற்களை அறிந்து களைவது நம்மில் பலருக்கும் கடினமாக இருக்கிறது.

**இன்றைக்குத் தமிழில் கலந்துள்ள ஆங்கிலச் சொற்களை எளிதில் அடையாளம் கண்டு பிடித்துவிடலாம். டீ, பஸ், ஸ்கூல், சைக்கிள் என்று பல ஆங்கிலச் சொற்களை நாம் அன்றாடம் பயன்படுத்தினாலும், அவை ஆங்கிலச் சொற்களே என்பது நமக்கு நன்கு தெரியும். டீ என்பதற்குத்தேநீர் என்றும், பேருந்து, பள்ளி, மிதிவண்டி என்றும் அச்சொற்களுக்கு நேரான தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்தவும் அறிந்திருக்கிறோம். ஆனால், தமிழில் கலந்துள்ள வடமொழிச் சொற்களை அறிந்து களைவது நம்மில் பலருக்கும் கடினமாக இருக்கிறது.**

“மன்னிப்பு” என்பது உருது மொழிச்சொல் என்று நமக்குத் தெரியவில்லை. அதற்கு நேரான தமிழ்ச்சொல் “பொறுத்தருளல்”. இதனை “மொழிஞாயிறு” தேவநேயப்பாவாணர் ஆராய்ந்து கூறிய பிறகுதான் நமக்குத் தெரிந்தது.

அவசரம், ஆசை, இராணுவம், ஈனம், உச்சி, சங்கீதம், சஞ்சலம், சந்தர்ப்பம், சோதனை, தகனம், தந்தம், நகல், நயனம், நீதி, பரம்பரை, பலன், வசந்தம், வீரம் போன்ற சொற்கள் தமிழ்ச்சொற்களல்ல, இவையாவும் வடமொழிச் சொற்கள்.

வியப்பாக இருக்கிறதா? ஆம், அவை வடமொழிச் சொற்கள் என்பதற்கான எந்தத் தடயத்தையும் காட்டவில்லை. வடமொழியிலும் அதே பொருளில் அச்சொற்கள் பயன்பாட்டில் இருக்கின்றன. வடமொழிச் சொற்களில் பெரும்பாலானவை தமிழ்ச்சொற்களைப் போலவே இருப்பதால், நமக்குக் குழப்பம் வருகிறது.

ஒரு மொழியில் சொற்கள் எவ்வாறு தோன்றுகின்றன, அவற்றின் தோற்றுவாயும் தென்படுகிறதா? என்பதை வைத்து அச்சொல் அம்மொழிக்குரியதா? இல்லையா? என்பதைக் கண்டுபிடிக்கிறார்கள்.

## சதுர எழுத்துக்கள்

**அவசரம், ஆசை, இராணுவம், ஈனம், உச்சி, சங்கீதம், சஞ்சலம், சந்தர்ப்பம், சோதனை, தகனம், தந்தம், நகல், நயனம், நீதி, பரம்பரை, பலன், வசந்தம், வீரம் போன்ற சொற்கள் தமிழ்ச் சொற்களல்ல, இவையாவும் வடமொழிச் சொற்களே.**

நேர் கோடுகள், வட்ட எழுத்து முறை ஆகியவை மறைந்து சதுர எழுத்துக்கள் தோன்றின. கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டிற்குப் பின்னர் சதுரம் சதுரமாக எழுதும் முறை தோன்றியது. தற்போது நாம் எழுதும் எழுத்துக்கள் சதுர எழுத்துக்கள் ஆகும்.

மூன்றாம் நூற்றாண்டில் இருந்து கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரை ஈ“.!.” நேர் கோட்டால் எழுதப்பெற்றது. பின்னர் பல மாறுதல்கள் ஏற்பட்டு ஈ என்று சதுர வடிவமைப்பு பெற்றது. தமிழில் மெய்யெழுத்துக் களுக்குத்தான் புள்ளிகள் உண்டு. க் ங் ச் ஞ்- மெய் எழுத்து

**கி.பி.பதினைந்தாம் நூற்றாண்டிற்கு பின்னர் நேர் கோடுகள், வட்ட எழுத்து முறைகள் மறைந்து சதுரம் சதுரமாக எழுதும் முறை தோன்றியது. தற்போது நாம் எழுதும் எழுத்துக்கள் சதுர எழுத்துக்கள் ஆகும்.**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 பேர்...

மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15,065 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## நட்டஈட்டை...

விவசாய கமத்தொழில் காப்புறுதிச் சபை வழங்கியது.

இதன் காரணமாக ஒரு பகுதி விவசாயிகள் மட்டுமே விண்ணப்பங்களைப் பெற்று மீளக் கையளித்துள்ளனர்.

விண்ணப்பப்படிவங்கள் கிடைக்காத ஏனைய விவசாயிகளுக்கு எந்தவித நட்டஈடும் கிடைக்காத நிலைமை ஏற்பட்டுள்ளது.

நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு, கடும் மழை காரணமாகப் பயிர் அழிந்த விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ளபோதிலும் விவசாயக் கமத்தொழில் காப்புறுதிச் சபையின் திட்டமிட்ட செயலால், தலையில் கை வைக்கும் நிலைக்குத் தாம் தள்ளப்பட்டுள்ளதாக விவசாயிகள் பலரும் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதேவேளை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈட்டைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சிகளை கமத்தொழில் திணைக்களம் செய்ய வேண்டுமெனவும் வடபகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம)



















## 12 - 15...

தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, நாளை 7ஆம் திகதி முதல் குறித்த வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நாடளாவிய ரீதியில் அனைத்துப் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## கடந்த 5 நாட்...

ளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், முதல் முறையாக நாட்டில் டெங்கு நோயாளர்களின் மூன்றாவது வகையினரும் தற்போது அடையாளம் காணப்படுவதாக வைத்தியர் அனோஜா வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ம)

## அரிசி விலை...

துள்ளது.

இந்த நிலையில், எதிர்காலத்தில் சந்தையில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் எனவும் அந்த சங்கத்தின் தலைவர் முதித்த பெரேரா தெரிவித்துள்ளார்.

வழமையாக ஜனவரி மாதத்தில் ஆண்டுக்கான பெரும்போக அரிசி சந்தைக்கு கிடைக்கும் என்றும் ஆனால், உரப் பிரச்சினை காரணமாக இந்த முறை போதியளவான அரிசி சந்தைக்கு கிடைக்கப்பெறவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## பட்டத் திருவிழா...

வல்வெட்டித்துறை உதயசூரியன் கடற்கரையில் வருடாந்திரம் தைப்பொங்கல் தினத்தன்று மாபெரும் பட்டத்திருவிழா இடம்பெறுவது வழமையாகும்.

அந்த வகையில் இம்முறையும் பட்டத் திருவிழாவை நடத்த ஏற்பாட்டாளர்கள் தீர்மானித்து இருந்தனர்.

இந்நிலையில், கொரோனா அச்சுறுத்தல் முழுமையாக நீங்காத நிலையில், பட்டத் திருவிழாவை நடத்தும்போது, கொரோனா தொற்று அபாயம் அதிகரிக்கும் என பிரதேச மக்கள் அச்சம் தெரிவித்தமையால், பட்டத் திருவிழாவை இடைநிறுத்துவதாக ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

அதேவேளை இம்முறை பட்டத் திருவிழாவிற்கு விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தனது முழுமையான ஆதரவை தெரிவித்து இருந்தமையும் அதனால், பல்வேறு தரப்பினரும் ஏற்பாட்டு குழுவிற்கு தமது கண்டனங்களை தெரிவித்து இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(ம-18,33,60,104)

## யாழ்.ஆரியகுளத்...

யார் நிதிப் பங்களிப்புடன் ஆரியகுளம் அழகுபடுத்தப்பட்டு, பொழுதுபோக்குத் திடலாகப் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடப்பட்டிருந்தது.

ஆரியகுளப் புனரமைப்புப் பணிகளின் போது, மதச் சின்னங்களை நிறுவுவதில் இழுபறி ஏற்பட்ட நிலையில், எந்தவொரு மத அடையாளத்தைப் பிரதிபலிக்கும் வகையிலான கட்டமைப்பெதனையும் அமைப்பதில்லை என்று மாநகர சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

எனினும், அரசியலமைப்பின்படி மத அனுட்டானங்[illegible] சபைக்கு இல்[illegible]

ருக்கும் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, ஆரியகுளம் மாநகர சபையின் ஆளுகைக்கு உட்பட்டது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் உரித்து ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறும் மாநகர ஆணையாளரைப் பணித்துள்ளார்.

மேலும், சமயத்தைப் பின்பற்றும் உரிமை தொடர்பில் மாநகர சபை உறுப்பினர்களுக்கு மேலதிக விளக்கங்கள் தேவைப்படின் தன்னைச் சந்திப்பதற்கு ஆலோசனை வழங்குமாறும் அந்தக் கடிதத்தில் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

(ம-18,33,104)

## வெடிகுண்டு...

புதுக்குடியிருப்பில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட காணியில் இருந்தே குறித்த வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில், கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட சுமார் 400 கிலோகிராம் எடை கொண்ட இரண்டு வெடிகுண்டுகளையும் சந்தேகநபர்கள் விற்பனை செய்வதற்காக எடுத்துச் சென்றமை தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்கள் கைவேலி, புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

## அர...

வர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதற்கு மக்கள் தயாராக இருந்தால் தானும் தனது கட்சியினரும் அதற்குத் தயாராக இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அப்படித்தான் அரசுகள் கவிழ்க்கப்பட வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டார். (ம)

## வங்கு...

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தற்போது நிதி அமைப்பை மறுகட்டமைக்க முடியாது போயுள்ளது.

வரலாற்றில் முதன்முறையாக நாம் வங்குரோத்து நிலையை அடைந்து விட்டோம்.

தற்போதைய பொருளாதார சிக்கல்களுக்கு ஏற்ற விதமாக குரல் கொடுக்காவிட்டால் [illegible] விடும் என்றார். (ம)

## நவாலி தெற்கில் வாந்தி எடுத்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

திடீரென ஏற்பட்ட உடல்நலக் குறைவால் வாந்தி எடுத்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.


இதில் நவாலி தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையாரான கணபதிப்பிள்ளை புஸ்பகாந்தன் (வயது-42) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் இரவு உணவு அருந்திவிட்டு தூக்கத்துக்கு சென்ற வேளை திடீரென வாந்தி எடுத்து சோர்வுற்ற நிலையில் காணப்பட்டுள்ளார்.

உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அவர் கொண்டு செல்லப்படும் வேளையில் இரவு 10 மணிக்கு உயிரிழந்துள்ளார்.


இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.


இவரது மரணம் தொடர்பான விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம)
















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யார் ஆட்சியாளர் என்று தெரியவில்லை சுசில் சீற்றம்

(கொழும்பு)

இன்றைய அரசாங்கத்தில் யார் ஆட்சி செய்கிறார்கள் என்பது தனக்குத் தெரியாது என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியின் போதே அவர் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவினால் நேற்று முன்தினம் சுசில் பிரேமஜயந்த அதிரடியாக இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். (ம)


**தேவை**

இஞ்சி இலை கிழங்குடன், சுண்டங்காய் மொத்தமாகத் தேவை. (C-3442)

**074 116 1955**

**பொருளியற் கல்லூரி**

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

மழலைகளின் வெற்றிக்காக யாழ். நகரில் ஆரம்பமாகின்றது.

**தரம் 5** புலமைப்பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்பு

**தரம் 4** அடிப்படை ஆரம்ப வகுப்பு

தைப் பொங்கல் திருநாளில் ஆரம்பம் 14.01.2022 வெள்ளி

தரம் 5 - பிற்பகல் 2.30 மணி

தரம் 4 - பிற்பகல் 3.30 மணி

நீங்கள் நன்கு அறிந்த வலி.மேற்கின் பிரபல்யம் பெற்ற ஆசிரியர்

**திரு. எம். சுகந்தன்**

( B.A (Dip. in. Teach), PGDE )

- வலி.மேற்கில் கற்பித்தலில் தனக்கென ஒரு தனித்துவமான பாணியைப் பின்பற்றும் ஆசிரியர்.
- ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு வழிகாட்டி, வெட்டுப் புள்ளியை விட அதிக புள்ளிகளைப் பெறவைக்கும் ஆசிரியர்.
- ஆசிரியரின் நூல்கள் இலங்கை பூராகவும் நுண்ணறிவு, வெற்றிக்கு வழிகாட்டி, கட்டுரைச் சங்கமம் போன்ற நூல்கள் இன்று வரைக்கும் தொடர்ச்சியாக வெளியிட்டு அகில இலங்கை ரீதியில் முத்திரை பதித்த ஆசிரியர்.
- தொடர் பரீட்சைகள் - வினாப்பத்திரம் I, II ஆகியவற்றிற்கு தனித்தனியாக பரீட்சை நடைபெறுவதுடன் ஒவ்வொரு அலகிற்கும் விசேட பரீட்சைகள் நடைபெற்று புள்ளிகள் வழங்கப்படும். **அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை.** பிரிவு I இற்கான அனுமதிகளை 11.01.2022 இற்கு முன்னர் பெற்றுக் கொள்ளவும்.

அனுமதி பெறும் நேரம் — சனி, ஞாயிறு : 12.30 - 4.30 P.M; ஏனைய நாட்கள் : 3.30 - 5.30 P.M

மேலதிக விபரங்களுக்கு **077 376 3511** (C-3443)

10வருட வெற்றிகரமான சேவையில்....

**கனடாவில் உயர்கல்வி**

**குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி**

எமது வீசா ஆலோசனை வாயிலாக கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிடமுடியும் (C-3437)

நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...

WORLD EDUCATION CONSULTANCY

0779265447 / 0217200989

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9403)

**076 825 7716** (ஆகாஸ்)

**வேலை வாய்ப்பு**

யாழ். நகரில் இயங்கும் Gift Center ஒன்றிற்கு வேலை ஆட்கள் தேவை.

- முகாமையாளர் (ஆண்)
- கணனி ரைப்பிங் (பெண்)
- விற்பனை பிரதிநிதி (ஆண்,பெண்)

(9427) **077 493 9799** / **077 210 5286**

**வேலையாள் தேவை**

கணனி ரைப்பிங், கோட் மிசின் மையிண்டர், பைண்டிங் வேலை தெரிந்தவர்கள், பழக விரும்புபவர்கள் தேவை. (9428)

**077 396 5214**

**வேலையாள் தேவை**

எமது நிறுவனத்திற்கு ஆண், பெண் இருபாலாரும் எமக்கு வேண்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.) நிர்வாகி (C-3423)

அருண் ரெக்ஸ் & பேபி நீட்ஸ் (நெல்லியடி)

**077 714 9459**

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

**UK-975/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3381)

**0768226240** DHL

**வெளிநாட்டு கற்கைநெறிகள் வேலைவாய்ப்புக்கள்**

கனடா / UK / சிங்கப்பூர் / மலேசியா ஆகிய நாடுகளில் CARE GIVER (முதியோர் - சிறுவர் - நோயாளர் பராமரிப்பு) COOK / HOTEL MANAGEMENT துறைகளில் வேலை வாய்ப்புக்களும் அதற்கான கற்கை நெறிகளும் (C-3382)

ஆரம்பம் - 15-01-2022 / உடனடி அனுமதிகள்



IELTS Life Skills B1

வெளிநாடு செல்வதற்கான ஆங்கிலம் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS

49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

**0777-068-777** R1


# மரண அறிவித்தல்



## திரு. அன்னலிங்கம் தெய்வீகலிங்கம்

**தோற்றம் : 1957.11.21 மறைவு : 2022.01.02**

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. அன்னலிங்கம் தெய்வீகலிங்கம் அவர்கள் கடந்த 02.01.2022 (ஞாயிற்றுக்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற அன்னலிங்கம் - சிவக்கொழுந்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வன் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (07.01.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மண்டைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-3422)

இல. 12, 1ஆம் ஒழுங்கை,
பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல் :-
அன்னலிங்கம் தெய்வீகலிங்கத்தின்
குடும்பத்தினரும் உறவினரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.